Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-1037)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 07 (09.06.2003) திங்கட்கிழமை இதழ்: 248

# ராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயம் அரசியல் யாப்பு விதிகளுக்கு முரணானது!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் 400 இற்கும் மேல் புகார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் அமைக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம், அரசியல் யாப்பின்படி சட்டவிரோதமானது என்ற விடயம் - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மேற்படி விடயம் குறித்து, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுமார் நானூறுக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு - யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம், இவ்விடயம் தொடர்பாக விளக்கம் கோரி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

இக்கடிதத்துக்கான பதில், தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்திருக்கிறது. இக்கடிதம், மனித உரிமை ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படியே, தாம் மேற்படி உயர் பாதுகாப்பு வலயத்தை தொடர்ந்தும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



ரோக்கியோவிலும் பம்மாத்துச் சபையாகிடுமோ...?



ஜப்பான், ஹிரோஷிமாவில் - யுத்தவீரர்கள் நினைவுப் பூங்காவுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தச் செல்கிறார் பிரதமர் ரணில்.

# இடைக்கால நிர்வாக அறிவிப்பை பிரதமர் இன்று வெளியிடலாம்!

## ரோக்கியோவில் எதிர்பார்ப்பு நிலவுகிறது

(ரோக்கியோ)

**வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை அமைக்கும் அறிவிப்பை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ரோக்கியோவில் இன்று ஆரம்பமாகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வைத்து விடுப்பார் என்று பரவலான எதிர்பார்ப்பு ரோக்கியோவில் நிலவுகிறது.**

ரோக்கியோவில் - அகாஸ்கா பிறின்ஸ் ஹோட்டேலில (Akaska Prince Hotel) இன்று காலை 9 மணிக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில், ஜப்பானியப் பிரதமர் கொய்சுமியின் தொடக்கவுரையைத் தொடர்ந்து - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்துவார். இந்த உரையிலேயே வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது குறித்த அரசின் முடிவை பிரதமர் ரணில் வெளியிடுவார் எனக் கூறப்படுகிறது.

ரோக்கியோவுக்குப் புறப்படமுன்னர் - இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதிலுள்ள சட்ட ரீதியான பிரச்சினைகள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் கமலசபேசனுடன் விரிவான பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தெளிவான வரைபு ஒன்றை முன்வைத்தால், அது தொடர்பாகப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணிலுக்கு எதிராக ரோக்கியோவில் ஆர்ப்பாட்டம்

(ரோக்கியோ)

ரோக்கியோவில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

சகாரா விகாரையில வழிபாடுகளை முடித்துவிட்டு பிரதமர் வெளியில் வந்தபோதே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதன்போது, விகாரையின் பிரதம பிக்குவான பானகம உபதிஸ்ஸ தேரரைத் தாக்குவதற்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சி மேற்கொண்டார்கள் எனத் தெரியவருகிறது.

இதன்பின்னர் - விகாரையின் பிரதிநிதிகளுக்கும் ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டிய ஜப்பானியப் பொலிஸார், அவர்களில் நான்கு பேரைக் கைதுசெய்தார்கள் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ரோக்கியோ மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி: ஜப்பான் அரசு கேட்டதற்கு சந்திரிகா மறுப்பு!

(கொழும்பு)

ரோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு, செய்தியொன்றை வழங்குமாறு ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா விடுத்த கோரிக்கையை, ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்துள்ளார்.

ரோக்கியோ மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை - ஒளிப்பதிவு நாடாவில் தருமாறு, ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டிருந்தார். இதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுதிய பதில் கடிதத்திலேயே, மாநாட்டுக்குச் செய்தியை வழங்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டைப் பற்றித் தனக்குச் சிறிதளவே தெரியும் என்றும், இந்த மாநாடு குறித்துப் பிரதமர் ரணில், தனக்குத் தகவல்களைத் தரவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள சந்திரிகா,

இந்த மாநாட்டில் வழங்கப்படும் நிதியுதவிகள் குறித்தோ, கடனுதவிகள் குறித்தோ தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கமாக இத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அண்ணனை அலவாங்கால் அடித்துக் கொன்ற தம்பி!

## முத்திரைச் சந்தியில் கொடூரம்



பலியானவரின் சடலம்

அண்ணன் - தம்பிக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து, ஆத்திரமடைந்த தம்பி, அலவாங்கால் அடித்ததில் - அண்ணன் தலை சிதறி அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

நேற்று மாலை - முத்திரைச் சந்திக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிறீதரன் (வயது 45) என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

தம்பியின் திருமண விடயம் தொடர்பாக, அண்ணனுக்குத் தெரியப்படுத்தப்படாதது குறித்து எழுந்த வாய்த்தர்க்கத்தை அடுத்து, இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதன்போது, தம்பியார் அருகிலிருந்த அலவாங்கை எடுத்து அண்ணனின் தலையில் அடித்தவேளை - வீட்டு முற்றத்திலேயே அவர் துடிதுடித்துப் பலியானார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# நீண்டகால கடனே வழங்கப்படும் இலவசமாக ஒன்றும் கிடையாது!

## சர்வதேச உதவி குறித்து அகாஷி கருத்து

(ரோக்கியோ)



"ரோக்கியோவில் நடைபெறும் மாநாட்டில், நாம் இலங்கைக்கு ஒன்றையும் இலவசமாக வழங்கவில்லை. மிகக் குறைந்தளவு வட்டியுடன்கூடிய நீண்டகாலக் கடன்களையே வழங்கவிருக்கின்றோம்'' என்று ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒன்றுபட்ட நாடென்ற பட்சத்தில், அந்த நிர்வாகத்தால் இந்த நிதியுதவி மீளச் செலுத்தப்பட வேண்டும். அந்த நிதியை நாட்டின் தென்பகுதி அபிவிருத்திக்கும், வடக்கு - கிழக்கு புனரமைப்பு அபிவிருத்திக்கும் பயன்படுத்தலாம்.

மக்களின் - தேவைகள், பாதிப்புக்கள் அடிப்படையில் திட்டங்கள் செயற்படுத்தப்படும். அரசாங்கமும், புலிகளும் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -913)

# சமாதானம் இப்பொழுது சர்வதேச சமூகத்தின் கையில்!

அண்மையில் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பின்படி, சுமார் 38 சதவீதமான சிறிலங்கர்களே நோர்வீஜியர்களின் நடுநிலையாளர் பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறப்படுகின்றது. மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் நடாத்திய இக் கணக்கெடுப்பின்படி, கடந்த ஆறு மாத காலத்துள் நோர்வே மீதான பொதுசனங்களின் மதிப்பிலும், நம்பிக்கையிலும் மிகக்கூர்மையான வீழ்ச்சி காணப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 27 வீதமானவர்களே, நோர்வேயின் பாத்திரம் நடுநிலையானது என்று நம்புகிறார்களாம். சிங்களச் சனங்கள் மத்தியஸ்தரைச் சநதேகிப்பதும், கோபிப்பதும் இதுதான் முதற்தடவையல்ல. ஏற்கனவே - நடுவராக வந்த இந்தியாவை - விளையாட்டு வீரராக மாற்றித் தமிழர்களோடு மோதவிட்ட மிகவெற்றிகரமான ஓரனுபவம், சிங்களத்தலைவர்களுக்கு உண்டு. அவர்களுடைய அகராதியில் 'நடுவர்' எனப்படுபவர் தமிழர்களுக்கு எதிராகப் பாவிக்கப் படத்தக்க ஒரு வெளியாள்தான்.

இத்தகைய அர்த்தத்தில் கூறினால் - சமாதானம் என்று அவர்கள் கருதுவதும் - தமிழர்களைத் தோற்கடிப்பதற்கான யுத்தமல்லாத ஒரு வழிமுறைதான். அதாவது - யுத்தமோ அல்லது சமாதானமோ எதுவோ அதன் இறுதி இலக்கு தமிழர்களைத் தோற்கடிப்பதுதான். இதில் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க வல்ல, சக்திமிக்க ஒரு நடுவரால் தவிர, வேறுயாராலுமே முறையாகச் சமாதானம் செய்யமுடியாது. இப்படிப் பார்த்தால் - விசுவாசமில்லாத இந்தச் சமாதானத்தை விடவும், யுத்தம் வெளிப்படையானதா? என்று கேட்கத் தோன்றும். யுத்தம் ஒரு தேவையான தீமையா? என்றும் கேட்கத் தோன்றும்.

ஆனால், இப்போதுள்ள நிலவரங்களின்படி, யுத்தத்தைப் பற்றிக் கதைப்பது என்பது சில அதிதீவிரவாதிகளின் விருப்பத்தையோ அல்லது விரக்திவசப்பட்டோரின் விருப்பங்களையோ பிரதிபலிப்பதாகவும் இருக்கலாம்.



ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சியுடன், அமைச்சர் மிலிந்த மொறகொட.

ஏனெனனில் , ரோக்கியோ மாநாட்டுக்குப் போகாத புலிகள் அடுத்த கட்ட பேச்சுக்களுக்குப் போகத் தயாராக இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

இது புலிகள் இப்பொழுதும் விட்டுக்கொடுத்துப் பேரம்பேசும் ஒரு 'மூடில்' இருப்பதைக் காட்டுகிறது. விசுவாசமில்லாத சமாதானமே எனினும், யுத்தத்தை மேலும் சில காலங்களுக்கு ஒத்திப்போடும் நிலமைகளே அதிகம் காணப்படுகின்றன. குறிப்பாக, இன்னும் சில வாரங்களில், அமெரிக்கா - புலிகளின் மீதான தடையை நீடிப்பதா, இல்லையா என்று முடிவெடுக்க வேண்டியிருக்கும். இந்தியாவில் புலிகளின் மீதான தடை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுவதுபோல, அமெரிக்காவில் அது ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்கப்படுகிறது. இதில் எடுக்கப்பட விருக்கும் முடிவுகள், சில சமயம் நிலமைகளை மறுபடியும் 'றிவேர்சில்' கொண்டு போகக்கூடும் அல்லது சில சமயம் யுத்தத்தை மேலும் பல காலங்களுக்கு ஒத்திவைப்பவையாக அவை அமையக்கூடும்.

ரணிலைப் பலப்படுத்துவதென்றால், அமெரிக்கா புலிகளின் மீதான தடையை விலக்காதிருப்பது நல்லது என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். ஆனால், சர்வதேச அரங்கைப் பொறுத்தவரை, ரணில் ஏற்கனவே பலசாலியாகத்தான் காணப்படுகிறார். இனி அவரைப் பலப்படுத்துவது என்பது, சமாதானத்தைப் பலப்படுத்துவதுதான். அதாவது, புலிகளை ஓரங்கட்டாத விதத்தில் முடிவுகளை எடுப்பதுதான். வொஷிங்ரன் மாநாடே அதன் தர்க்கபூர்வ வளர்ச்சிக்காக ஏழாங்கட்டப் பேச்சுக்களையும், ரோக்கியோ மாநாட்டையும் பலியிட்டது என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த 16 மாதகால சமாதான முயற்சிகளின் பேறாக - இதுவரை, எந்தவொரு நாடும் புலிகளின் மீதான தடையை விலக்கிக்கொள்ளவில்லை என்பது புலிகளால் எரிச்சலோடேயே பார்க்கப்படுகிறது என்பதை, சமாதானம் செய்யும் நாடுகள் புரிந்துகொள்வது அவசியம். எந்தவொரு இயக்கத்தையும் தடைசெய்ததன் மூலம், அந்த இயக்கத்தை அழித்துவிட முடியவில்லை என்பதே பொதுவான வரலாறாகியுள்ளது.

தடைகள் எப்பொழுதும் தீர்க்கக் கடினமான பெரிய பிரச்சினைககளை வெறும் சட்டப்பிரச்சினைகளாகக் குறுக்கி வருகின்றன. உலகில் இதுவரை செய்யப்பட்ட எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும், தடை செயய்யப்பட்ட இயக்கங்களோடு செய்யப்படும் சமாதானமே - இறுதியானதும், ஸ்திரமானதும், யதார்த்தமானதுமாக இருந்திருக்கிறது என்பதையும், இங்கு சுட்டிக்காட்ட வேணடும். விசுவாசமில்லாத ஒரு சமாதானத்தை, கடந்த 17 மாதங்களாக இழுத்திழுத்துக் கொண்டுவந்ததில் புலிகளின் அசாதாரணப் பொறுமைக்கும், முதிர்ச்சிக்கும் ஒரு பெரிய பங்குண்டு.

ரோக்கியோ மாநாட்டோடு, எல்லாமும் குழம்பிவிடும் என்ற எதிர்பார்க்கைகளுக்கு மாறாக, இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசுவதற்காக - ரணில் விடுத்த அழைப்பை, புலிகள் சாதகமாக பரிசீலிக்கத் தயாராகியதன் மூலம், மேலுமொரு சந்தர்ப்பத்தை மேற்குலகிற்கு வழங்கியிருப்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். வொஷிங்ரன் மாநாட்டில் விட்ட தவறுகளை சரிசெய்ய, இதுவே சரியான சந்தர்ப்பம்.

வரும் ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும், ரணிலைப் பாதுகாக்கும் பொறுப்பை மேற்குலகம் ஏற்றிருப்பது மெய்யானால், சமாதானத்தைப் பாதுகாப்பதுதான் அவரைப் பலப்படுத்துவதற்குரிய ஒரேவழி என்பதையும், ஏற்றுக்கொள்ளவேண்டும். ரோக்கியோ மாநாட்டில் தரப்படும் நிதிக்குள் இருக்கும் அரசியலும் இதுதான். அதாவது, மூன்று ஆண்டுகளுக்கு என்று உதவி வழங்கப்படுகிறது. அது மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டுக்கும் தரப்படும் என்றும் கூறப்படுகிறது. மூன்று ஆண்டுகளுக்கான நிதி உதவி என்பதன்மூலம், உதவி வழங்கும் நாடுகள், மிகத்தெளிவாக தமது நிகழ்ச்சி நிரலைச் சந்திரி

**நிலாந்தன்**

காவுக்கு வெளிக்காட்டியிருக்கின்றன. அதாவது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையிலுமான வரப்போகும் மூன்று ஆண்டுகளுக்கும், சந்திரிகாவுக்கு எதிராக ரணிலைப் பலப்படுத்தப் போகிறார்கள் என்பதே, ரோக்கியோ மாநாடு தரும் செய்தியாகும். இந்நிலையில், காசால் ரணிலுக்கு அரணமைத்துக் கொடுத்தால் மட்டும் போதாது. எல்லாவற்றுக்கும் முதலில் சமாதானம் வரவேண்டும். முன்னரும் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய - இலங்கை உடன்படிக்கையையடுத்து, பாரிஸில் விசேசமாக ஒரு உதவிவழங்கும் மாநாடு நடத்தப்பட்டது. அதில் சமாதானத்தின் பேரால் 483 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால், சமாதானம் முறியடிக்கப்பட்டதையடுத்து சுமார் 260 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டும் தரப்பட்ட நிலையில், மிகுதிப்பணம் வழங்கப்படவில்லை. இதிலுள்ள கொடுமை என்னவென்றால், 16 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே வழுவழுத்த நிலையில்தான், இப்பொழுதும் சமாதானம் இருக்கி

(10 ஆம் பக்கம் பார்க்க)

உ

தில்லையம்பதியாள் துணை

## இன்று கோண்டாவில் தில்லையம்பதியில் ஐந்தாம் திருவிழா (பூச்சப்பரம்)



இராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

பல்லவி

வண்ண வண்ண மலர் ஆரம் தொடுத்தபூச் சப்பரத்தில்
கண்ணழகி சிவகாமி காட்சிப் பவனி தந்தாள்

அநுபல்லவி

எண்ணமேனி புல்லரிக்கும் இதயம் இன்பத் துடிதுடிக்கும்
நண்ணும் மனம் நெக்குருகும் இரங்கும் கண்ணில் நீர் பெருகும்

சரணம்

01. கோயிலெல்லாம் அருள்மயம் கோண்டாவிலூர் விழாமயம்
ஆயபக்திக் கோலங்களும் ஆழ்ந்த பக்திக் கலைஞர்மயம்
தூய தில்லையம்பதியில் திருவருள் சக்திமயம்
பாயும் பக்தி .வெள்ளமயம் பண்ணிசையும் சக்திமயம்

02. சக்தி ஓம் சக்தி என்ற சப்பர வடம் பிடித்தே
பக்தியுடன் வீதிவலம் பக்தர் இழுத்தே வருவார்
இத்தரையில் கோண்டாவிலூர் இன்பபுரி ஆயிற்றம்மா!
சித்தியெல்லாம் எமக்கருளச் சிவகாமித்தாயவளும்

ஆக்கம்: அருட்கவிச் செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர

பாடியவர்: T.M.S.செல்வக்குமார்

**மங்கள இசை**

அளவையூர் என்.கே. பத்மநாதன் குழுவினர்,
கோண்டாவில் வீ.கே.பஞ்சமூர்த்தி குழுவினர்
இணுவையூர் மறைந்தும் மறையாத தவில் மேதை
என்.ஆர். சின்னராசாவின் புதல்வர்,
என்.ஆர்.எஸ். ரவீந்திரன் (தவில்)
தவில் சுடர் ஒளி பீ.பாலகிருஸ்ணன்

நாதஸ்வர வித்துவான்கள்
கே.பி.பாலமுருகன், கே.பி.சீனிவாசன் சகோதரர்கள்
இணுவையூர் என்.ஆர்.கோவிந்தசாமியின் புதல்வர்கள்
என்.ஆர்.கே. இரத்தினகுமார், என்.ஆர்.கே. வாகீஸ்வரன்
சகோதரர்கள், கே.ஆர்.அன்பழகன், என்.ஏ.கார்த்திகேயன்,
ஈ.வி.இளையராஜா
சுதுமலை தவில் வித்துவான் எம்.நடராஜன் குழுவினர்
எஸ். கண்ணன், எஸ். செந்தில்குமார் நாதஸ்வரம்
கல்வியங்காடு குமாரதாஸ் குழுவினர்

**ஒளி அமைப்பு**

மனோலைற் கோப்பாய்

**தெய்வீகப் பேருரை**

"தேவி மகாத்மியம் என்னும் பொருள்பற்றி"
நாவற்குழியூர் நாகரத்தின ஐயர் கலாதரசர்மா

மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை
மாலை 7.00 மணிக்கு அம்பாள் பூச்சப்பரத்தில் தெருவீதியுலா வருதல்

(370)

தில்லையம்பதியாளே! சிவகாமசுந்தரியே! சரணம்

பூச்சப்பர அமைப்பு:
உரும்பிராய் அ.கருணாகரஐயர்

ஐந்தாம் திருவிழா உபயகாரர்:
முத்தொளி

திருக்கோயில் பரிபாலனசபை,
தில்லையம்பதி.

# உடனடியாகப் பதவி விலகுங்கள்; ஜே.வி.பி ரணிலிடம் கோரிக்கை!

## ரில்வின் சில்வா கடிதம் அனுப்பினார்.



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கேட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே, அவர் இவ்வாறு கேட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வுப் போர்நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னர், நாட்டின் அரசியலமைப்பு பலமுறை மீறப்பட்டுள்ளது. அரசியலமைப்புக்கு விரோதமான பல நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகத் 'தற்காலிக' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவது மட்டுமன்று, அதை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவும் முடிவு செய்துள்ளது.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் வடக்கு - கிழக்குப் பகுதிகளைத் தாரைவார்த்துக் கொடுப்பதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.



இத்தகைய சட்டதிற்கு முரணான காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில், பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும் என்றும், ரில்வின் சில்வா தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இடைக்கால நிர்வாகத்தை அமைத்தால் மக்களுடைய சந்தேகங்கள் நீங்கும்!

## அரச சார்பற்ற அமைப்புகள் வேண்டுகோள்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதன் மூலம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீணடும் ஆரம்பிக்கமுடியும் என்று, அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து கொழும்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகம் வடக்கு-கிழக்கில் அமைக்கப்படுவது இன்றைய கட்டாய தேவையாகும். இன்று மக்கள் மத்தியில் சமாதானப் பேச்சுகள் இடைநடுவில் முறிந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கிறது.

இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவித்து, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதன் மூலமே, மகள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்தச் சந்தேகங்களை அரசாங்கம் தீர்த்துக கொள்ள முடியும் என்றும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ரோக்கியோ மாநாட்டின் பின்னர் புதிய உத்வேகத்துடன் பேச்சுக்கள்!

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் - ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து, உத்வேகத்துடன் முன்னெடுக்கும் என்று விஞ்ஞான கைத்தொழில், பொருளாதார மறுசீரமைப் புத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தாலும், ரோக்கியோ உதவி மாநாட்டையடுத்து மீண்டும் நடத்தப்படும். இதன்மூலம் இருதரப்புக்கும் இடையிலான முரண்பாடுகள் களையப்பட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# விசா வழங்குவதில் ஊழல் புரிந்ததை அமெரிக்க அதிகாரி ஒப்புக்கொண்டார்!

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசா வழங்குவதில் ஊழல் புரிந்ததாக ரஜ்பின் விக் என்ற தூதரக அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டிருப்பதாக, சமஷ்டி புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் - விசா வழங்கும் பிரிவில் கடமையாற்றிய அதிகாரிகள்- இலங்கை, வியட்நாம் போன்ற நாடுகளைச் சோர்ந்தோருக்குப் பணத்தைப பெற்றுக்கொண்டு விசா வழங்குவதில் ஈடுபட்டனர்.

இந்த ஊழல் அம்பலமானதை அடுத்து, கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் அமெரிக்கத் தூதரக விசா வழங்கும் பிரிவு மூடப்பட்டது. சமஷ்டி புலனாய்வுப் பொலிஸார் இது குறித்து கலிபோர்னியாவில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றிய இந்த ஊழியர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒன்பது அதிகாரிகளில் ஒருவரே, தாம் விசா வழங்குவதில் ஊழல் புரிந்ததை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இதேவேளை, கொழும்புத் தூதரகத்தில் மூடப்பட்டிருந்த விசா வழங்கும் பிரிவு, இன்று முதல் மீண்டும் செயற்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி - தென்மராட்சியில்

# அடுத்து ஆறுமாதங்களுக்குள் பத்தாயிரம் வீடுகளுக்கு மின்சாரம்!

## அமைச்சர் கரு ஜெயசூரிய தகவல்

(கொழும்பு)

இன்னும் ஆறு மாதங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் பத்தாயிரம் வீடுகளுக்கு மின்சார இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இது குறித்து கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்-

மூவாயிரத்து இருநூறு வீடுகளுக்கு மின்சார விநியோகத்தை வழங்கும் பத்து மின்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட அடுத்து ஆறு மாத காலத்துக்குள் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பத்தாயிரம் வீடுகளுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தீவகத்தில் மிகக் குறைந்தளவு மக்களே மின்சார வசதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். விரைவில் அனைத்துத் தீவுகளிலும் மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில், மின்சார சபை அதிகாரிகள் ஈடுபடவுள்ள தாகவும் அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.



# லக்பிம பத்திரிகை அலுவலகம் ஆயுதபாணிகளால் தீ வைப்பு!

## ராஜகிரியவில் பரபரப்புச் சம்பவம்

'லக்பிம' பத்திரிகை அலுவலகம் மீது வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி - அதைத் தீயிட்டு எரித்தனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ராஜகிரியவிலுள்ள 'லக்பிம' பத்திரிகை அலுவலகத்துக்குள் வெள்ளிக்கிழமை இரவு ஆயுதபாணிகளான ஆறு பேர் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டனர்.

அங்கிருந்து தளபாடங்களையும், இயந்திர சாதனங்களையும் அடித்து நொறுக்கிய ஆயுதபாணிகள் - பின்னர் அலுவலகத்தைத் தீயிட்டு எரித்தனர்.

அயலிலுள்ள மக்கள் தீயை அணைத்துவிட்டபோதும் - அலுவலகத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 'லக்பம' பத்திரிகை சமீபகாலமாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே ஆகியோருக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வந்தது.

இப்பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக மானநஷ்டம்கோரி - மகிந்த ராஜபக்ஷவும், ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயும் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'லக்பிம' பத்திரிகை நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்றும், உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அத்துடன், குற்றவாளிகளை உடன் கண்டுபிடித்துக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# ஆயுர்வேத வைத்தியர்களின் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

## சுதேச வைத்தியத்துறை அமைச்சர் தெரிவிப்பு

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக சுதேச மருத்துவத்துறை அமைச்சர் சரத் சந்திர ராஜகருண தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் 80 வைத்தியர்களின் வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள், அடுத்தவாரம் வர்த்தமானி மூலம் கோரப்படவுள்ளன.

வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விரைவில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். நீண்டகாலத்துக்குப் பின்னர் ஆயுர்வேத வைத்தியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வைத்தியர்கள் பின்தங்கிய பகுதி வைத்தியசாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமிக்கப்படுவர் எனவும், அமைச்சர் சரத் சந்திர ராஜகருணா தெரிவித்தார்.



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சிறுவர் செயற்பாட்டுக்கான அமைப்பு நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களைப் படத்தில் காணலாம். (படம்: லிவிங்ஸ்டன்.)

# வட-கிழக்கு பாடசாலை நூலகங்களுக்கு ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா ஒதுக்கீடு!

## நூலக இணைப்பாளர் தகவல்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் நூலக அபிவிருத்திக்காக அரசாங்கம் 1 கோடி 70 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த நிதியுதவியைக் கொண்டு, பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு முன்னெடுத்துவருவதாக நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, பாடசாலை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் நூலகங்கள் அவசியமானவை. வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 77 புதிய நூலகங்களை அமைக்கவும், 206 நூலகங்களைப் புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன், 300 பாடசாலைகளின் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், 315 பாடசாலைகளுக்கு ஆசிரிய நூலகர்கள் நியமிக்கப்படவுள்ளன.

இனிவரும் காலத்தில் நூலக அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைதடும், இந்த ஆசிரிய நூலகர்கள் மூலமே முன்னெடுக்கப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருத்தமான இடைக்கால நிர்வாகம் நீடித்த அமைதிக்கு அடிப்படையாகும்!

## வடமாகாண அதிபர்கள் சங்கம் வலியுறுத்துகிறது

யுத்தத்தின் தாக்கத்தால் நொந்துபோயுள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள், மனிதாபிமான தேவைகள் மற்றும் நியாயமான உரிமைகள் அரசினால் நலினப்படுத்தப்படுமாயின், அது நாட்டில் மீண்டும் அமைதியற்ற சூழலையே ஏற்படுத்தும். எனவே, பொருத்தமான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை விடுதலைப் புலிகளின் தலைமையில் ஏற்படுத்துவதே நீடித்த சமாதானத்திற்கு அடிப்படையாக அமையும் - இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைப் பரிணாமங்கள் இன்று எவருக்கும் ஒளிவு மறைவற்ற ஒன்றாகும். ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் புரையோடிப்போயுள்ள இப்பிரச்சினையானது, வேண்டுமென்றே புறந்தள்ளித் தோற்கடிக்கப்பட்ட நியாயமான பல சாத்வீகப் போராட்டங்களைக் கடந்து, கடந்த இருபது ஆண்டு காலத்தில் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து அனைத்து இனமக்களுக்கும் அழிவினைத்தந்த ஓர் போராக மாறியது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும், அரசியற்கட்சிகளும் மேற்கொண்ட தீர்க்கதரிசனமற்ற, போட்டா போட்டி அரசியல் நடவடிக்கைகளால், தமிழ் பேசும் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது. இனங்களுக்கிடையேயான ஒற்றுமை, புரிந்துணர்வு என்பன அற்றுப் போவதற்கு அவை காரணமாக அமைந்தன.

இன்று பல கசப்பான அனுபவங்களின் பின்னர், காலங் கடந்தாயினும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க, புரிந்துணர்வு ஒப்பந்தமானது சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சினை நல்கியது. ஆயினும், அந்த ஒப்பந்தத்தின் பின்னர், அதில் ஒத்துக்கொள்ளப்பட்ட முனைப்பான விடயங்களை அமுலாக்குவதில் ஏற்படும் தடங்கல்களும், தாமதங்களும் சமாதானத்தின்பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சிதறடிப்பதாக உள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையினை மீண்டும் ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான நிர்வாக மீள்கட்டமைப்பொன்று அவசியமானது என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதற்குப் பொறுப்பானவர்களை, பொறுப்பாக அமர்த்த வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு ஆகும்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையில், வடக்கு - கிழக்கு பிரதேச புனருத்தாரண நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்த வேண்டியது யதார்த்தமான ஒன்றாகும். இந்த விடயத்தில் ஏற்படும் இழுபறி நிலையானது, ஏற்படப்போகும் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடக்கூடாது என்றும், அந்த அறிக்கையில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியாலை கிழக்கில் மிதிவெடிகள்; அகற்றித் தருமாறு கோரிக்கை!

## பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

அரியாலை கிழக்குப் பகுதிகளான - நாவலடி, முள்ளி, மணியந்தோட்டம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரவும், தமது விவசாய நிலங்களில் செய்கைகளை மேற்கொள்ள வசதியாகவும், அப்பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றித்தரும்படி நல்லூர்ப் பிரதேச செயலரையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும் அப்பகுதி மக்கள் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

மேற்படி இடங்களில் சில பகுதிகளில் இன்னமும் மக்கள் மீளக்குடியமரவில்லை எனவும், அப்பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டமை உறுதிப்படுத்தப்படாததுடன், குடிநீர் மற்றும் மின்சார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(55)

## யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து

# ஹெலியில் கொண்டுசென்ற குழந்தை ஆபத்தான கட்டத்தை தாண்டிற்று !

(கொழும்பு)

அவசர சிகிச்சைக்காக - ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஹெலி மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்ட குழந்தை, சிகிச்சையின பின்னர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குழந்தைக்குப் போதிய சிகிச்சைகளை வழங்க வசதிகள் இல்லாத நிலையில், அவசரமாக ஹெலிமூலம் கடந்த புதன்கிழமை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இக்குழந்தைக்கு டாக்டர் அஜித் அமரசிங்க சிகிச்சைகளை அளித்ததையடுத்து, ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாகத் தெரியவருகிறது.

கொழும்பு அப்பலோ மருத்துவமனையிலேயே இக்குழந்தைக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் துரைராசா நினைவு நாள் நிகழ்வு!

யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் ஒன்பதாவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நாளை மறுநாள் புதன்கிழமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஜோன் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.நவரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் - யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். மேலும் - கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (124)

# ஓய்வூதியர்களின் பிரச்சினை விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான முரண்பாடுகளைத் தீர்க்கும் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை, பொதுநிர்வாக, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ள உயர்மட்டக் குழுவானது, அதன் அறிக்கையைத் தயாரிக்கும்போது, ஓய்வூதியம் பெறுவோரின் சங்கங்களின் ஆலோசனைகளையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் மொத்தம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமானோர் ஓய்வூதியம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

# பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு பெருமளவு மக்கள் முண்டியடிப்பு

இதுவரை பதியப்படாத பிறப்புகளுக்குச் சான்றிதழ் வழங்குவதற்காக யாழ்.செயலகத்தால் நடத்தப்பட்ட "அதே இடத்தில் சேவை"யில் பெருமளவிலான மக்கள் தமது தேவையினை நிறைவேற்றினர்.

இதுவரை பிறப்புகளைப் பதியாமல் இருப்போர் உடனடியாகப் பதிவு செய்துகொள்வதற்காக நடத்தப்பட்ட "அதே இடத்தில் சேவை"க்கு பெருமளவிலான மக்கள், பல்வேறு இடங்களிலிருந்து நேற்றும் வருகை தந்திருந்தனர்.

இச்சேவையில், பதிவாளர்கள், அனைவரும் கலந்துகொண்டு மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

நடைமுறைகளை அறிந்து கொள்ளாத பெற்றோர்கள் சிலர் தாம் வருகை தராமல் பிள்ளைகளை வேறு ஆட்களுடன் அனுப்பி வைத்திருந்தனர்.

அத்துடன் அவர்கள் உரிய ஆவணங்களையும் சமர்ப்பிக்கத் தவறியமையால் திரும்பிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### மட்டுவில் வைரவர் ஆலய கும்பாபிஷேகம்

மட்டுவில் சந்திரபுரம் அருள்திரு வைரவ சண்முகராலய எண்ணெயக் காப்பு நிகழ்வு எதிர்வரும் புதன் கிழமையும், கும்பாபிஷேகப் பெருவிழா மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது. (24)

### உலக சுற்றாடல் தின நிகழ்வு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, அரியாலை அபிவிருத்தி சங்கத்தினரால் நடத்தப்பட்ட சுற்றாடல் தின நிகழ்வுகள், கடந்த வியாழக்கிழமை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

### ஆத்மஜோதி ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி முத்தையாவின் 86 ஆவது ஜெயந்தி விழாவும், அறநெறிப் பாடசாலை ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஏழாலையிலுள்ள ஆத்மஜோதி தியான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அனுசரணையுடன், ஐ.முருகானந்தம் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

11 வீரர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்களைக் கொண்ட போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் கழகங்கள் - விண்ணப்படிவங்களை - உதவி அரசாங்க அதிபர், மருதங்கேணி, தாளையடி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (17)

### நெடுந்தீவுக்கு புதிய சமூகசேவை உத்தியோகத்தர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் புதிதாகச் சமூகசேவை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த சில மாதங்களாக இங்கு பதில் கடமை அடிப்படையில் சேவையாற்றியவர், மாற்றலாகிச் சென்றமையையடுத்து இந்த இடத்திற்கு எஸ்.வரதபாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார். (113)


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் - உ.தேனுஜன்
முகவரி - பொன்னையா வீதி, ஆறுகால்மடம்.





பெயர் - கு.அவிஷா
முகவரி - மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

பெயர் - ச.சஞ்சிகா
முகவரி - 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.



நான்காவது அகவையில்



பெயர் - உ.சாயிலக்ஷன்
முகவரி - பொன்னையா வீதி, ஆறுகால்மடம்.

ஒன்பதாவது அகவையில்

பெயர் - ஸ்ரீ.விஜிதரன்
முகவரி - புத்தூர் மேற்கு புத்தூர்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------

முகவரி :-----------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------------
பெற்றார் ஒப்பம்



அனுராதபுரம் சந்தி தாண்டி மதவாச்சி ஏறி வவுனியா போகவேண்டும். வவுனியா எங்கள் தேசம். பிறகு எவன் எங்களைத் தாண்டி என்ன செய்துவிட முடியும்? ஆனால், அதற்கிடையில் குரும்பை வெட்டுகிற கத்திகள் வைத்திருக்கிறார்கள் - தமிழர் தலைகள் வெட்டுவதற்கு.

தமிழர் இராசதானியாக இருந்து, பிறகு சிங்களவர் இராசதானியாக மாறிய அனுராதபுரம் தமிழர்களைக் கொல்வதில், தமிழர் சொத்து அழிப்பதில் முன்னுக்கு நிற்கிறது. இப்போது தமிழ்க்கடைகள் எரிக்கப்பட்டுவிட்டன. அதனால் சுவாலை தெரியவில்லை. காங்கைகளின் வெக்கை வீசுகிறது. அங்குள்ள தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அதனால் கதறல் கேட்கவில்லை. பிணங்களினதும், நிணங்களினதும் மணம்வீசுகிறது. ஆயினும், சிங்கத்தின் பசி அடங்கவில்லை. வாயை ஆவென்று வைத்தபடி நிணம் புசிக்க சிங்கங்கள் அலைகின்றன. இன்ஸ்பெக்ரர் கதிர்காமருக்கு அதுதான் யோசனையாக இருந்தது.

இவ்வளவு தமிழர்களையும் எப்படிக் காப்பாற்றுவது? சிங்களத்தின் பசி வயிற்றுக்குப் பெருந்தீனி! அனுராதபுரச் சந்திக்கு முன்னர், புத்தளம் றோட்டில் நாலைந்து மைல் தள்ளியிருக்கும் ஒரு குளக்கட்டில் வந்தவர்களை நிறுத்தி வைத்துவிட்டு மேலும் பாதுகாப்புக்கு இராணுவத்தைக் கேட்டார் இன்ஸ்பெக்ரர். இப்போதைக்கு இராணுவம் வருவதாகத் தெரியவில்லை. 'ஹாஜியார் வீட்டிலேயே நின்றிருக்கலாமோ?' அது ஹாஜியார் குடும்பத்துக்கு ஆபத்துத்தான்.

'அம்மாள் தந்த குழந்தை. அம்மாள்தான் குழந்தையா வந்தாள். அதுதான் அந்த றாங்கி இருக்குது. பிடிவாதம் இருக்குது. நினைத்ததைச் செய்கிற ஓர்மம் இருக்குது. அன்பு, ஆசை, இரக்கம் அத்தனையும் இருக்குது. கொஞ்சி விடத்தரும் கன்னத்தில் எத்தனை இனிமை இருக்குது. இப்போது ஆழ்ந்து அமைதியாக உறங்குகிறாள் அம்மாள். அம்மாளே உன் குழந்தை. நீதான் காக்கவேண்டும்'- அந்தக் குழந்தையை இரு கைகளில் வைத்து அம்மாளிடம் கையேந்தினா அம்மா. அந்த இருட்டினில் மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தில் அம்மாவின் கண்களில் கண்ணீர்பெருகியது. அப்பா அதைக் கண்டார். அம்மாவின் முதுகைத் தடவினார். அப்பா சப்பாணி கட்டி இருந்து பிள்ளையைக் கைகளில் ஏந்த அம்மா விசிறினா. விசிறிக் கொண்டுதான் பார்த்தா.



அ.இரவி

மிகத் தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. அங்க பாருங்கோ அப்பா கண்டுவிட்டார். காட்டுக்கை தேன் எடுக்கப்போறாங்கள் என்றார் அப்பா. இன்ஸ்பெக்ரர் கதிர்மரும் கண்டுவிட்டார். அது பாதுகாப்புக்கு வருகிற இராணுவ ட்ரக்குகளினதும், ஜீப்புகளினதும் வெளிச்சம். மிகத்தூரத்தில்தெரிகிறது. அவ்வளவுதான். அம்மாவிற்கு இது ஆபத்தான வெளிச்சம் என்று உடனே உறைத்துவிட்டது.

அம்மா கீரிமலையில் வாழ்கிறபோதே கடலில் கண்ட வெளிச்சம்தான் அது. வலித்தூண்டல் மீனவர்கள் இறால் பிடிக்க, நண்டு பிடிக்க சூள் கொளுத்திக்கொண்டு இரவு வழிய கடலுக்குப் போவார்கள். கடலில் வரிசையாக சூள் வெளிச்சம் தெரியும். சாமம் அம்மா முளித்துப் பார்க்கிற போது, நடுக்கடலில் மிகச்

## பகுதி - 03

# [illegible] கூடுகின்றன

சின்னதாய் குழம்பிக் குழம்பி வெளிச்சப்பொட்டுக்கள் ஆடும். மனிசர் என்றால் வரிசையாக இருக்கும். பேய்கள்தான் குழப்பிவிடுவன. நடுக்கடலில் சூறை அடித்து இருக்குமா? சாமம் எழும்பி ஆடவேண்டாமா? இன்னும் உயிர்களை விழுங்கும் வேகத்தில் வேண்டி நிற்கின்றன. அம்மா பயத்தில் கண்களை மூடுவா.

பயம்தான். ஆனால், இப்போது கண்ணை மூட முடியாது. பேய்கள் வருகின்றன. பிள்ளையைக் காக்கவேண்டும். இன்ஸ்பெக்ரருக்கு விளங்கிவிட்டது. ஒருத்தரும் சத்தம் போடாதையுங்கோ. ஒருத்தரும் ஓடாதையுங்கோ. நாங்கள் இருக்கிறம். காப்பாத்துவம். இன்ஸ்பெக்ரருக்கு இன்னுமொன்றும் விளங்கிவிட்டது. தாங்கள் எங்கு நிற்கிறோம் என்று இராணுவத்தினருக்குத்தான் அறிவிக்கப்பட்டது. அந்த ஒளிவுமறைவான இடம் காடையருக்குத் தெரியச் சந்தர்ப்பம் இல்லை. இராணுவம் அனுப்பியவங்கள் வாறாங்கள். சிந்த வேண்டிய இரத்தங்கள், சிந்திய பிறகு எல்லாம் முடிய இராணுவம் வந்துசேரும். இன்ஸ்பெக்ரருக்குக் கைநடுங்கியது. றிவோல்வரில் கைவைத்தார்.

வெசாக் முடிந்து ஒருமாதம்தான்... வெசாக்கிற்கு கொண்டைப்பணியாரமும், கொக்கீசும், களுதொதலும், கிரிபத்தும் தந்தவர்களின் சகோதரங்கள். மாமன், மச்சான்மார் வாறாங்கள். இம்முறை அப்பா அழுகிறார். அழுவது தெரிய மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம் தேவையில்லை. சிறிது தூரம்தான். என்றாலும் நூற்றுக் கணக்கான தீப்பந்தங்களின் வெளிச்சம் போதும்! அம்மாள் தந்தவள் அழியப்போகிறாள்.

தீப்பந்தங்கள் நெருங்கி வருகின்றன. கத்தி, கோடரி, வாள், பிக்கான், அலவாங்கு, பொல்லு எல்லாம் இருந்தனவா தெரியவில்லை. வெளிச்சம் அவற்றைக் காட்டவில்லை. வரும் வேகத்தைக் காட்டியது. கண்களின் வெறியைக் காட்டியது.

## குறுநாவல்

இன்ஸ்பெக்ரர் தனது றிவோல்வரினால் முதல்வெடி வைத்தார். வானை நோக்கித்தான். முதலில் துப்பாக்கிகள் முழங்கின. அக்கா திடுக்கிட்டு முழித்துக் கத்தத் தொடங்கினா. தீப்பந்தங்கள் முன்னேறின. நிலத்திற்குச் சமாந்தரமாக ஒரு அடி உயரத்தில் குண்டுகள் பாயத்தொடங்கின. சற்று சிலநிமிடங்கள் கழித்துத்தான் தீப்பந்தங்கள் பின்னோக்கி ஓடின.

**வ**வுனியாவிற்கு பஸ்கள் வந்துசேர காலை பத்து மணியானது. கச்சேரி வளவினுள் பஸ்கள் புகுந்தன. பஸ்ஸைக் கண்டு ஒருதமிழன் ஓடிவந்தான். ஒரு நூறு தமிழர் ஓடி வந்தனர். அப்பா பஸ்ஸால் இறங்கி ஒரு தமிழன் கைபிடித்து எங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டம். எங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டம் என்று விம்மினார். பிள்ளைக்கு வெயில்படக்கூடாது என்று யன்னலில் துவாயைத் தொங்கவிட்டிருந்த அம்மா, துவாயை விலத்தி அதைப் பாத்தா. அழுதா. எங்கள் தேசத்துச் சூரியனின் வெய்யில் படட்டும் என்று துவாயை அவிழ்த்தா. பஸ்ஸில் வந்த எல்லோரும் எல்லாற்றை கையைப் பிடிச்சும் அழுதிச்சினம். அம்மாளே அம்மாளே என்று அம்மா இன்னும் அழுதா. இன்ஸ்பெக்ரர் கதிர்காமரைக் கையெடுத்துக் கும்பிட்டா. அம்மாள் அனுப்பிவந்த அவன், மகன் கதிர்காமன்.

எங்கன்ரை நாட்டின் வெயில் சுடத் தொடங்கிச்சுது. அந்தச் சாமம் குளக்கரை தராத குளிரை, இவ்வளவு நாளும் கல்லுலுவவின் வாய்க்காலோரம் தராத குளிரை அந்த வெய்யில் தந்தது.

வவுனியா எம்.பி. அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் அய்யா வந்தார். நடையில நிமிர்வு இருந்தது. ஏன் கூன வேண்டும்? யாருக்குக் கூன வேண்டும்? நெஞ்சிலை கை வைத்தார். வாங்கோ எங்கன்ரை சனங்கள் நீங்கள். உங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டீங்கள்.. இனி ஆருக்குப் பயப்பிடவேணும்? ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. அங்கார் பெரிய வக்குக்கை தண்ணி இருக்கு. குளிக்கிற ஆக்கள் போய்க் குளியுங்கோ. பொம்பிளைகளுக்குப் புறம்பா இருக்கு. இங்கை கிடாரம் கிடாரமா பால்கோப்பி, பால் தேத்தண்ணி இருக்கு. குடிக்கிற ஆக்கள் குடியுங்கோ, சாப்பிடுகிற ஆக்கள் அந்த மண்டபத்துக்குப் போங்கோ. விரும்பின சாப்பாடு இருக்கு. ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. குளிச்சு சாப்பிட்டு, குடிச்சு ஆறுதலா இருங்கோ. பின்னேரம் பஸ் வெளிக்கிடுது.

பெரிய தொட்டி நிறையத் தண்ணி இருந்தது. கிடாரம் கிடாரமாப் பால்கோப்பி இருந்தது. கிடாரம் கிடாரமாய் சோறு, கறி இருந்தது. களைப்பாற மரநிழல் இருந்தது. திண்ணைகள் இருந்தன.

அடங்காத் தமிழன் அத்தனை உபசாரங்களும் செய்து விட்டுப் போனான். அவனுக்கு ஆயிரத்தெட்டு வேலைகள் இருந்தன. ஒரு வேலை அதிமுக்கியமான வேலை.

சுவாமிப்பிள்ளை நல்ல வேட்டைக்காரன். வேட்டை, தொழில் அல்ல. வேளாண்மை தான் தொழில். மாதத்திற்கு ஒருக்காலாவது பெரும் வேட்டை ஆடவேண்டும். அல்லது பொச்சம் அடங்காது. கொழுத்த முயல் ஒன்றினை விழுங்கிக்கொண்டிருந்த வெங்கணாத்திப் பாம்பை உருகுதடம் போட்டுப் பிடித்து, தன் கொட்டில் வாசலில் பார்வைக்குக் கட்டி வைத்திருந்தார். வயிற்றில் முயல்வைத்து வாலால் துடித்துக் கொண்டிருந்தது பாம்பு.

(தொடரும்...)

# இலக்கியச்சோலை

## நூல் அகம்



சங்கர் எழுதிய 'மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்' என்ற நூல் அண்மையில் வெளிவந்திருக்கின்றது.

''முயற்சி செய்பவனுக்கு பாதைகள் திறந்து வழிவிடுகின்றன. சோம்பிக்கிடப்பவன் கண்களுக்கு எப்போதும் பாதைகள் மூடியவண்ணமே தென்படுகின்றன'' என்ற தேசியத் தலைவரின் சிந்தனையுடன் ஆரம்பிக்கும் இந்த நூல்-

ஒரு போர்க்கால நாட்குறிப்பாக அமைந்துள்ளது. ஆனையிறவுத் தளத்தை வீழ்த்துவதற்கான சண்டை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - 2000 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி களதரிசனங்களை வெளிப்படுத்த ஆரம்பித்த பயணம், அரியாலை வரை தொடர்ந்த கதையை சங்கர் விபரித்துள்ளார்.

போர்க்களத்தில் எத்தகைய சிரமங்கள் மத்தியில் போராளிகள், பொதுமக்கள், எதிர்கொண்டனர் என்பது முதல், போர்முனையில் சாதித்த சாதனைகள்; களமுனையில் படையணிகளை வழிநடத்திய தளபதிகள், போராடிய போராளிகள், உதவிசெய்த பொதுமக்கள், படையினர் விட்டோடிய முகாம்களின் தோற்றம் என்பனவாறாக - இந்த நூல் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

**- சுபத்ரா -**

சண்டை, அதற்கான உத்திகள், பெறுபேறுகள் என்பவற்றுக்குப் புறம்பான வகையில் களத்தில், தான் கண்ட அனைத்தையும் சங்கர் பதிவு செய்திருக்கிறார். சிறிய சிறிய விடயங்களைக்கூட மிகத் துல்லியமான அவதானிப்பினூடாக இவர் வாசகர்களுக்குப் பகிர்ந்தளித்திருக்கிறார்.

ஒரு நாட்குறிப்பேட்டில் தாம் சந்தித்த வாழ்க்கைப் பதிவுகளை எவ்வாறு பதிவு செய்கிறோமோ அவ்வாறே, மிகவும் சுவாரசியமாக - தனக்கே உரித்தான மொழிநடையுடன் ஆனையிறவு முதல் அரியாலை வரையான களநிலைத் தரிசனத்தை இவர் தந்திருக்கிறார்.

களமுனையிலிருந்து கிடைக்கும் சண்டையின் பெறுபேறுகள் மட்டுமே செய்தி ஊடகங்களில் வெளிவரும். ஆனால், அந்தச் சண்டைகள் எத்தகைய சூழலில், புவியியல் அமைப்பில் இடம் பெற்றன என்பது பற்றிய தகவல்களை இத்தகைய தரிசனங்கள் மூலம்தான் வாசகர்கள் அறிந்துகொள்ள முடியும்.

குறிப்பாக, ஆனையிறவுத் தளம் எத்தகைய வசதிவாய்ப்புக்களோடு - பலமாக அமைக்கப்பட்டிருந்தது என்பது இந்நூலில் விலாவாரியாக விபரிக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, பல தரிசனங்களை இந்நூலில் காணலாம்.

தான் சந்தித்த தளபதிகள், போராளிகள், பொதுமக்களின் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவப்படுத்தி இந்த நூலை சங்கர் எழுதியுள்ளார். ஆங்காங்கே தனது நண்பர்களும், ஆரம்பகாலப் போராளிகளுமான- சீலன், சந்தோசம், குமரப்பா, புலேந்திரன் போன்றோரின் நினைவுகளையும் சங்கர் மீட்டுள்ளார.

'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்ற பின்னணியில்- போராளிகள் களத்தில் நிற்கும் புகைப்படத்தை முன் அட்டையிலும், தளபதி பானு ஆனையிறவில் தேசியக் கொடியைப் பறக்கவிடுவதைச் சித்திரிக்கும் புகைப்படத்தை பின் அட்டையிலும் தாங்கி இந்த நூல் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## நூல் அகம்



செல்வி.வாசுகி சொக்கலிங்கம் அவர்களின் 'மருதத்திணை' என்னும் நூல், ஓவியர் ரமணியின் அழகான அட்டைப்படத்துடன், 285 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்துள்ளது. ஏற்கனவே, தனது தந்தையார் கலாநிதி சொககலிங்கம் அவர்களுடன் இணைந்து தரமான தமிழிலக்கண நூல் ஒன்றினை (உரைநடைத் தெளிவில்) வெளியிட்ட அனுபவம் வாசுகிக்கு உண்டு. நீண்ட காலத்துக்குப் பின்னர், சங்கத் தமிழிலக்கியம் சம்பந்தமாக ஆதாரபூர்வமான தேடல்களுடனும், சான்றுகளுடனும் ஆய்வுநூல் ஒன்று யாழ்ப்பாணத்தில் வெளிவந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும். சங்க இலக்கியங்களில் மருதத்திணைசார் ஒழுக்க நியமங்கள் பற்றி இதுவரை காலமும் நிலவிவந்த பொதுவான கருத்துக்களை வாசுகி இந்நூலின் ஊடாக மீளாய்வு செய்துள்ளார். ஆய்வொன்றுக்கான இலக்கிய மீளாய்வினை மேற்கொள்ளும்போது, கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுடன் விருப்பு, வெறுப்பற்ற நிலையில்- இலக்கியம், வரலாறு, ஒழுக்கம் முதலானவற்றில் நோக்கு நிலைகளுக்கு உட்பட்டு ஏற்க வேண்டிய கருத்துக்களை ஏற்றும், மறுதலிக்க வேண்டிய கருத்துக்களை மறுதலித்தும் தனது அகப்புறச் சான்றுகளை முன்வைத்து இந்நூலை ஆக்கியுள்ளார் வாசுகி.

**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)


சங்ககாலச் செய்யுட்களில் ஊடல்சார்ந்த ஒழுக்கத்துக்குரிய மருதத்திணைப் பாடல்களை ஆதாரமாகக்கொண்டே இந்த ஆய்வுநூல் அமைந்துள்ளது. அவற்றினூடாகச் சமுதாயம் மேலான்மை பெற்றிருந்த சமூக நியமங்களையும், அவற்றின் தோற்றப் பின்னணிகளையும், அவை பிற்காலங்களில் அடைந்த பரிணாமங்களையும் 'மருதத்திணை' நூல் செம்மையுறச் சித்திரித்துள்ளது. பரத்தமை ஒழுக்கத்தின் தோற்றத்திற்கான காரணிகள், அவை காலப்போக்கில் கண்டுவிட்ட மாற்றங்கள் ஆகியனவும் இந்நூலின் உட்பொருளாகின்றன. மேலும், சங்ககால இலக்கிய நியமங்களுக்குத் தொல்காப்பியம் இலக்கண மரபாய் அமைந்துள்ள தன்மையும், பொருத்தப்பாடு பற்றிய ஒப்புநோக்கும் வாசுகியின் பரந்த இலக்கிய தேடலுக்குச் சான்றாகின்றன.

சங்கத் தமிழர் வாழ்வியல் கோலங்களில் தரிசிப்புக்களினூடாகப் பிற்காலத் தமிழர் வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கங்களையும், மாற்றங்களையும் அக்கால இலக்கியக் கண்கொண்டு காட்சிப்படுத்துவதாக 'மருதத்திணை' அமைந்துள்ளது. உயர்தரப் பட்டப் படிப்புக்களை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாத்திரமன்றி, தமிழ் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் இந்நூல் வாசிப்பிற்குரியது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு தமிழாசிரியையான வாசுகி, இந்நூலின் மூலம் ஈழத் தமிழ் இலக்கிய உலகிற்குப் புதிய ஒளி பாய்ச்சியுள்ளார். அந்தப் புத்தக ஒளியினால் நாமும் பயன் பெறுவோமாக.

# கிழக்கும் மேற்கும்

## மாமன்னன் அரிச்சந்திரன் -இறையன்பன் யோபு



முனிவருக் களித்த வாக்கைக்
காத்திடும் எண்ணம் கொண்டு
இனியதம் மனைவி யோடு
மகனையும் விற்றுப் பெற்ற
பெரும் பணம் போதா தென்று
தன்னையும் விற்றுப் பெற்ற
பொருளையும் முனிவ ருக்குக்
கொடுத்துத் தன் வாக்கைத் காத்தான்!
மன்னனை அடிமை கொண்டோன்
சுடுகாடு காக்கச் செய்தான்!
மன்னனின் மனைவி யோடு
மகனையும் விலைக்குப் பெற்ற
அந்தணன் - இரண்டு பேர்க்கும்
ஓய்வில்லா உழைப்புத் தந்தான்!
அவ்விதம் உழைப்பை என்றும்
அறியாதோர் துயரில் நொந்தார்!
அயலில்வாழ் சிறுவர்களுடனே
மகனையும் தர்ப்பை கொய்ய
அனுப்பினாள் காட்டுக் கன்னை-
அந்தணன் பணிப்பை ஏற்றே!
காரிருள்சூழும் வேளை
வந்ததால் விடியற்காலை
காட்டினிற் தர்ப்பை கொய்யக்
கூட்டமாய்ச் சென்ற மற்றச்
சிறுவர்கள் மெல்ல சொல்லித்
தம்மில்லம் திரும்பக் கண்ட
சிறுவனின் அன்னை சென்று
''என் மகன் எங்கே?'' என்று
கேட்டபோ தவர்கள் ''உங்கள்
மகனையோர் நாகம் தீண்டக்
காட்டினில் இறந்தான்'' என்று
அன்னைக்குப் பதில் தந்தார்கள்!
செய்தியால் அதிர்ந்த அன்னை
அந்தணர்க் கதனைச் சொல்லச்
''செய்வதற் கிங்கே வேலை
மிகவுண்டு அதனால் நீயும்
விரைவினில் வருவாய்''என்று
விடைதந்தான் விருப்பமின்றி!

(தொடரும்..)

முருகு

# இருட்டின் காலம்



காலம்
என் வீட்டுக்கலண்டரை
கிழித்துப் போட்டது.
அது கிழித்துப் போட்ட
தேதிகளை,
சேகரிக்க சிரமப்பட்டேன்.
இருட்டின் காலம் பட்டது.

அந்தக் காலத்தில்தான்,
சூரியன் இருட்டின்
கர்ப்பத்திலே இருந்தது!
என்வீட்டுப் பூக்கள் ஒவ்வொன்றும்
கல்லறையின் அர்ச்சனைக்கு
ஆசைப்பட்ட காலம்.

ஆம்!
அன்னை மடி என்ற
தொட்டிலை
மௌனமாய்த்
திருடியது மரணம்.

அம்மா...!
என்று எழுத்துக்கூட்டி
படிக்க நினைத்தபோது
என் எதிரில்
இல்லை அவள்.

மௌனத்தின் அந்தப்புரத்திலே
வார்த்தையை
அடைகாத்தேன் - அப்போதுதான்
சமூகம் சூட்டியது
ஒரு பட்டம்!
அது எனக்கு மட்டுமல்ல,
என் உடன்பிறப்புக்களுக்கு கூட.

யாருமே பார்த்ததில்லை,
பட்டம் பெற்றபின்
பள்ளிக்குப் போனவனாய்
நான் போனேன்.

என் சுதந்திரத்திற்கு
யாரும் விலங்கிடவில்லை.
யாராயினும் போட்டதுண்டா?
ஊர்க்குருவிக்கு ஊரடங்கு!
எப்போதாவது இருந்ததுண்டா?
குயில் ஒன்று மௌனவிரதம்.

விலங்கிடாத சுதந்திரமாய்
நான் திரிந்தாலும்,
விழுகின்ற
கண்ணீரில்
உப்புச்சுவை இருந்தது.
அது என்
எச்சிலை
ருசி ஆக்கியது.

அந்த வேளையில்தான்
இருட்டின்
பிரசவம் நிகழ்ந்தது.
பிரசவம் இருட்டுக்கு
சுகமோ? என்னவோ?
எனக்கு அது சுகமாயிருந்தது.

அன்னை இல்லை
அரவணைக்க.
கைகள் இருந்தது.
அதுவும் என்னுடன்
கூடப்பிறந்த
குற்றத்துக்காக...!

நிரோஜிகன்

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி முப்பத்தைந்து

கிளாலி வானின் கருமுகில் போனது.
கிளாலி ஆழியிற்துயரம் குறைந்தது.
அழாமற் பணயம் போயினர் மானுடர்.
அன்றொருதரம் கிளாலித் துறையினை
விழுங்கிக்கொள்ள 'யாழ்தேவி' கிளம்பிற்று.
வெடியிசையுடன் வந்த யாழ்தேவியோ
புலோப்பளையில் தடமும் புரண்டது.
புயலிற்சிக்கிப் 'பாழ்தேவியாய்ப்' போயிற்று.

கண்டி வீதியோ கலகலப்பின்றியே
களைத்துக் கிடந்தது பின்வந்த நாட்களில்.
புன்னகைக்க முயன்ற பொழுதிலும்
புண்ணிருந்து மனைந்ததந் நாட்களில் -
சண்டை என்ற குதிரை களைத்து; 'A
9' மருங்கிலும் தளந்து அமர்ந்ததும்,
வண்ணத் தேர்தலின் மாற்றமும், பேச்சுக்கள்
வளர்ந்தெழுந்ததும் வந்ததந் நாட்களில்.

தொண்ணூற்று மூன்றின் கடைசி.. தொடக்கம்
தொண்ணூற்று நாலு வைகாசி மாதம் பத்
தொன்பதாம் தினம் மட்டும்.. அமைதியோ
தொட்டில் கட்டிற்று.. ஆடித் துயின்றது.
இன்று போல் இல்லை.. என்றிடும் போதிலும்
ஏதோ கற்பனைப் பூக்கள் குலுங்கின
அன்பு, தீர்வுகள் பற்றிய சேதியால்
அடிக்கடி செவிப்பறைகள் அதிர்ந்தன.



- ஜெயங்கொண்டான்

# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்



அவன் சற்றும் தயக்கமின்றி **My father in - law** என்றான். எனக்கு வந்த சிரிப்பை நான் வலிந்து அடக்கிக் கொண்டேன் (**Father in - law**- பெண் கொடுத்த மாமனார்).

ஆனால், அதிபர் சிரிக்கவில்லை. தனது சிறிய தந்தையையே அவன் **Father in - law** என்று குறிப்பிட்டதை அவர் விளங்கிக்கொண்டு, அவனின் தோளில் தட்டி, "நீ இம்மாதத்திலிருந்து பாடசாலைக் கட்டணம் கட்டவேண்டாம்'' என்று தமது உடையல் தமிழில் அவனுக்கு உரைத்தார்.

நவநாகரிகமும், ஆங்கில மொழியிலே நிபுணத்துவமும் பெற்றிருந்தும், மாணவனின் பிழையான ஆங்கிலத்தைப் பெரிதுபடுத்தாது, அவனுடைய மொழியிலே அவனுக்கு ஆதரவு கூறிய அந்தப் பெருமகனாரின் பண்பு என் உள்ளத்தைத் தொட்டது.

கனிஷ்ட, இடைநிலை வகுப்புக்களுக்கான பயிற்சி பெற்றிருந்த எனக்கு, நாலாம் வகுப்பாசிரியனாய்ப் பணியாற்றவும், ஐந்தாம் வகுப்பில் தமிழ் கற்பிக்கவும் வேண்டியிருந்தது.

எல்லாப் பாடங்களையும் போதிய ஆயத்தம் செய்து, பாடக்குறிப்பெழுதிக் கற்பிப்பது என் வழக்கம். என் வகுப்பு மாணவர்களிலே பெரும்பான்மையினர் மலையகத் தமிழர். குறைந்தளவு முஸ்லிம்களும், சில யாழ்ப்பாணத்தவரும் இருந்தனர். யாழ்ப்பாணப் பிள்ளைகள் பதுளையில் அரசுப் பணியாற்றியவரதோ, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து வர்த்தகம் செய்தவரதோ மக்கள். இவர்களின் பேச்சுக்கள் (யாழ்ப்பாணப் பிள்ளைகளுங்கூட) எனக்கு ஆரம்பத்தில் புதுமையாயிருந்தன. 'டுப்படிக்கிறான், விரசாய்ப்போறான், எங்கிட்டே' முதலான சொல்லாட்சிகளை விளங்கிக்கொள்ளச் சிலநாட்கள் எடுத்தன. காலப்போக்கில் அவை இனிக்கவும் செய்தன.

கதைகளைக் கேட்டும், வாசித்தும் ஓரளவு கதைக் களஞ்சியமாய் இருந்த நான், கதைகட்டிச் சுவையாகச் சொல்வதிலும் ஈடுபட்டு என் மாணவர்களை ஈர்த்தேன். அதனோடு சிறுவர் பாடல்களை அவர்களைக் கவருமளவுக்குப் பாடியதாலும், பாடல்களுக்கேற்ற அபிநயம் காட்டியதாலும் - அவர்களுக்கு என்மீது ஓர் அலாதியான பிடிப்பு உண்டாயிற்று. தமிழ்ப பாட நேரங்களில் மட்டுமன்றி, ஓய்வுகிடைத்த வேளைகளிலெல்லாம் 'கதை கதை பாட்டு பாட்டு' என்று அவர்கள் என்னை நச்சரிப்பது வழக்கம்.

என்னிடம் கற்றவர்களில் இன்னும் நினைவில் நிற்போர் சோமநாதன், இராமநாதன், சந்திரசேகரன் என்னும் மூவர். மொடேன் படமாளிகை உரிமையாளரின் மக்களான- இராமநாதனும், சோமநாதனும் இன்று பொறியியலாளராய் வெளிநாடுகளில் பணியாற்றுவதாய்ச் சந்திரசேகரன் மூலம் அறிந்து மகிழ்ந்தேன், மகிழ்கிறேன்.

சந்திரசேகரன் என்னிடம் நாலாம் வகுப்பில் கற்றவர். தமது க.பொ.த. உயர்தரக்கல்வியை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலே பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பிரிவுக்குத் தெரிவாகி, தமது திறமையால் - கல்வி மாணிப் பரீட்சையிலே சிறப்பாகத்தேறி, கல்வித்துறையில் விரிவுரையாளராய் இன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பேராசிரியர் பதவியில் மிகவும் திறம்படப் பணியாற்றி வருகின்றார்.

நான் பொதுக்கலைத் தகுதிகாண் பரீட்சைக்கு வெளிவாரி மாணவனாய் 1964 இல் பேராதனை சென்ற பொழுது, எதிர்பாராத வகையில் இவரைச் சந்திக்க நேர்ந்தது. அதுவொரு சுவாரசியமான நிகழ்வு.

பேராதனையில் - அருணாசலம் மண்டபத்தின் பக்கமாய் வீதியில் நானும், என் போன்ற ஜீ.ஏ.கியூ (**G.A.Q**) பரீட்சைக்குத் தோற்ற வந்திருந்த ஆசிரியர் சிலரும் வந்து கொண்டிருந்தோம். எங்கள் பின்னாலிருந்து 'சேர் சேர்' என்ற ஒரு குரல்.

எல்லோரும் திரும்பினோம். அழைத்தவர் என்னைச் சுட்டிக்காட்டி 'உங்களைத்தான்' என்ற வண்ணம் என்னருகில் வந்தார்.

"சேர் என்னைத் தெரிகிறதா...?'' நான் தடுமாறினேன். அசடு வழிந்தபடி 'நீங்களா..?' என்று இழுத்தேன்.

"ஊவாக் கொலிச்சிலே உங்களிடம் நாலாம் வகுப்பில் படித்தவன் நான்'', மங்கலான ஒரு நினைவு. சொற்களைப் படபடவென்று விரைந்து பேசி அப்படிப் பேசுவதால் கொன்னையோ என்று சந்தேகிக்க வைக்கும் குரல். அதேகுரல் ஆ.. தெரிந்து விட்டது.

''சந்திரசேகரன் ....நீங்கள்.... நீர் .... சந்திரசேகரன் தானே'' வந்தவரின் முகத்தில் மகிழ்ச்சி ... மலர்ச்சி.

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஉடையார் ஆவது அறிவர் அறிவுஇலார்*
*அஃதுஅறி கல்லா ரவர்*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## ரோக்கியோ -என்ன சொல்கிறது?

உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாடு எதிர்பார்த்திருந்தது போலன்றி - உதவி கோரும் முக்கிய தரப்புக்களில் ஒன்றான விடுதலைப் புலிகளின் பங்கேற்பின்றியும், நோர்வே நாட்டின் முக்கியஸ்தர்களின் பிரசன்னமின்றியும் இன்று ஆரம்பமாகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதிலும், வட - கிழக்கில் புனரமைப்பு, புனர்வாழ்வுப்பணிகளை முன்னெடுப்பதிலும் கணிசமான நிதியுதவியைப் பெற்றுத்தரக்கூடிய சந்திப்பாக இன்றைய மாநாடு கணிப்பிடப்பட்டபோதும் -

எதிர்பார்த்தளவு நிதியுதவியை சர்வதேச நாடுகள் தந்துதவுமா என்ற சந்தேகம் இழையோடியதாகவே - மாநாடு சோபையிழந்த நிலையில் இன்று தொடங்குவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரோக்கியோ மாநாடு மூலம் - இலங்கை எதிர்பார்த்து நிற்கும் நிதியுதவி வழங்கப்பட்டாலும் கூட,

விடுதலைப் புலிகளின் பங்கேற்பை அரசாங்கமும், சர்வதேசமும் பெற்றுவிடாத பட்சத்தில் இந்த மாநாட்டின் சாதகம் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு முக்கியமான அடிப்படைகள் இல்லாமலே போய்விடுகின்றன.

உண்மையில் - ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதற்குரிய பொருத்தமான சூழலை ஏற்படுத்தியிருக்க வேண்டிய நிலையில்,

ரோக்கியோ மாநாட்டினூடான உதவிகள் - பாதிக்கப்பட்டோரைச் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக, விடுதலைப் புலிகள் கோரிநின்ற அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகத்தை, தரமுடியாத பட்சத்தில் - தனது அரசியல் நகர்வுகளில் பெரும் பின்னடைவைச் சந்தித்ததாகவே அரசதரப்புகுழு ரோக்கியோ சென்றிருக்கிறது.

விடுதலைப் புலிகள் ரோக்கியோவுக்குச் செல்வதற்குரிய ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு - முழுமையாக அரசாங்கத்தின் பக்கமே சார்ந்திருந்தது.

அதிலும் - அவ்வாறான வழிவகையை ஏற்படுத்துவதற்குரிய போதுமான கால எல்லையையும் அரசாங்கம் கொண்டிருந்தது.

ஆனால் - இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாக உருப்படியற்ற மாற்று யோசனைகளை அறிவித்து, அதனூடாக விடுதலைப் புலிகளைத் திருப்தியடையச் செய்துவிடலாம் என்று மனக்கணக்குடன் காத்திருந்த அரசாங்கம்,

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் தெளிவாகவும், உறுதியாகவும் இருப்பதை உணரத் தொடங்கியதால் - தனது காய்நகர்த்தலில் தோல்வியையே சந்தித்தது.

இது அரசாங்கத்துக்கு மட்டும் கிடைத்ததல்ல. விடுதலைப் புலிகள் முன்வைத்த நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து சாதகமான பதிலைப் பெற்றுக்கொடுக்க முடியாத சர்வதேசத்திற்கும், அவர்களது அணுகுமுறைக்கும் பின்னடைவையே தந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளை அழுத்தத்திற்குள் சிக்கவைப்பதன் மூலம் - தாம் நினைத்ததைச் சாதித்து விடலாம் என அரசாங்கமும், சர்வதேச சக்திகள் சிலவும் போட்ட தப்புக்கணக்கின் பெறுபேறே - இன்று ரோக்கியோ மாநாடு சுவாரசியம் குறைந்து போயிருப்பதற்குக் காரணமாகும்.

சர்வதேசத்தைப் பொறுத்தளவில் - குறிப்பாக சில தரப்புக்கள் - விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிலுள்ள நியாயத்தை ஏற்றுக்கொண்டு - அதனை வலியுறுத்திய வேளை -

வேறு சில தரப்புக்களோ - தாம் எண்ணியவாறே விடுதலைப புலிகளும் நடக்கவேண்டும் என்ற ஆதிபத்திய உணர்வோடு நடந்து கொண்டதை அவதானிக்கவே முடிந்தது.

குறிப்பாக - அமெரிக்கத் தரப்பிலிருந்தான சில அறிக்கைகள் இந்தவகையில் அமைந்திருந்ததை நோக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் - ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாமல் விட்டதன் மூலமாக - விடுதலைப் புலிகள் அழுத்தந்திருத்தமாக குறிப்பிடத்தக்க செய்திகளை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் அனுப்பிவைத்துள்ளார்கள் என்பது கவனிக்கப்பட்டாக வேண்டும்.

- தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு- உரிய புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் ஒரு தகுந்த கட்டமைப்பினூடாக துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

- அதற்கான அதிகாரமும், சட்ட அந்தஸ்தும் கொண்ட, இடைக்கால நிர்வாக அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும.

- முன்னரைப் போல, சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களை அரசியல் பகடைக்காய்களாக்கி ஆதாயம் சம்பாதிப்பதை இனியும் தமிழர் தரப்பு அனுமதிக்காது.

- உலக வல்லரசாயிருந்தாலென்ன, பிராந்திய சக்திகளாக இருந்தாலென்ன - துணிவுடனும், நியாயத்துடனும், அர்ப்பணிப்புடனும் கட்டிவளர்க்கப்பட்ட ஒரு மக்கள் விடுதலை இயக்கம், எக்காரணம் கொண்டும் அடிபணிந்து விடாது.

- சமாதானத்தின் திசையைத் தீர்மானிப்பவர்களும், அமைதிக்கான உரிய பாதையை வகுப்பவர்களுமாகச் செயற்படும் தமிழர்கள் - அமைதியின் பெயரால் ஏமாளித்தனங்களுக்குள் ஆட்படமாட்டார்கள்.

என்ற வலிமையான செய்திகளை விடுதலைப் புலிகள் ரோக்கியோ செல்லாமல் விட்டதன் மூலமாக - உறுதியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தவகையில் - தாம் பங்கேற்காமல் விட்டதன் மூலமாக தமிழ் மக்களுக்கான தமது அரசியல் நிலைப்பாட்டை அழுத்தமாகச் சொல்லியிருப்பதன் மூலம் விடுதலைப் புலிகள் வெற்றியைச் சம்பாதித்தவர்களாகவும்,

ஆதிபத்திய சிந்தனைகளுடன் விடுதலைப் புலிகளையும் அடக்கியாண்டுவிடலாம் என்ற நோக்கத்தோடு செயற்பட்ட சர்வதேச அரசியற்சக்திகள் சிலவும் -

உருப்படியற்ற யோசனைகளால், செயற்பாடுகளால் விடுதலைப் புலிகளைத் திருப்தியடையச் செய்துவிடலாம் என்ற கனா, கானலாகி விட்ட நிலையில் அரசாங்கத்தரப்பும் - பின்னடைவு கண்டவர்களாகவே இன்று ரோக்கியோ புகவும்,

தமிழர் வரலாற்றில் இன்றைய மாநாட்டின் பரிணாமமும் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்தவாறே நகர்கிறது.

# தேசத்தை நேசிக்கின்ற பண்பு மாணவர்களுக்கு வளரவேண்டும்!

## மாணவ எழுச்சி நாள் நிகழ்வில் தமிழினி உரை

மாணவர்களிடையே தேசத்தை நேசிக்கின்ற பண்பு நிச்சயம் ஏற்படவேண்டும். நாம் போராடும் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இனம். எமது தேசத்தைக் கட்டியெழுப்பப் போகிறவர்கள் இந்த மாணவர்களே என்று, தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்கள் வகுப்பறைகளில் பாடத்திட்டங்களுக்கு மேலதிகமாகவுள்ள பல விடயங்க்ளையும் கற்கவேண்டும். எமது மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் இளமைக் கால வாழ்க்கையில் நெருக்கடியான நிலைக்குள்தான் கல்வி கற்கவேண்டியுள்ளனர்.

பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும், பற்றாக்குறைகளுக்குள்ளும் கடந்த 30 வருடங்களாகப் புதிய பாய்ச்சலுடனும், புதிய வீரியத்துடனும் எமது மாணவர் சமூகம் வளர்ந்துள்ளது.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் கல்வியை தமது முக்கியமான அம்சமாகத்தான் கருதுகிறான். கல்வி கற்கவில்லையென்றால், வாழ்க்கையை இழக்கிறான். கற்றவன் என்றால் உலகமே அவனது காலடியில் வந்து நிற்கிறது.

எமது மாணவர் சமூகம் நாளாந்தம் புதிய புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு கற்பதால் ஏற்படுகின்ற சிந்தனைகள், உருவாக்கங்கள் என்பன எமது தேசத்தை, எதிர்காலத்தைக் கட்டியெழுப்புகின்ற மூலவளமாகப் பயன்பட வேண்டும் என்பதுதான எமது பேரவா. இதனை எமது மாணவர்கள் மனதில் நன்றாக இருத்திக் கொள்ளவேண்டும்.



மாணவர்களின் கல்வியை வளம்படுத்தப் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகிறது. ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர் பற்றாக்குறைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

பள்ளிசெல்ல வேண்டிய வயதில் ஒருநேர உணவைக் கூட, உண்ணமுடியாது தொழிலாளர்களாக மாறியுள்ள பல பிஞ்சு உள்ளங்களை நாம் காண்கிறோம்.

இத்தகைய - உங்கள் சகோதரர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கக்கூடிய சிறந்த கல்வியாளர்களாக உங்களை மாற்றியமைக்க வேண்டும்.

சிறப்பான கல்வியைக் கற்று, ஒரு ஒளிமயமான வாழ்கைக்கு உங்களை நீங்கள் தயார்படுத்துங்கள். இந்தத் தேசம் உங்களின் உழைப்பால் நிச்சயம் வளருமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் சந்திரிகாவிற்கு மாற்றுக் கொள்கைகள் இல்லை!

## பட்டி வீரக்கோன் சாடுகிறார்

(கொழும்பு)

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எந்த மாற்றுக்கொள்கையையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன், பொதுஜன ஐக்கிய முன்னணியும் - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் நெருக்குதலுக்குள்ளாக்கவே தனது சக்தி முழுவதையும் பயன்படுத்துகின்றது என்று லங்கா சமசமாசக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

அரசாங்க சிவில் ஊழியர் தொழிற்சங்கக் கூட்டத்தில் உரையாற்றியபோது, அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

மக்களைப் பாதிக்கின்ற பல தீவிரமான விடயங்களில் பொ.ஐ.முன்னணி கூடிய அக்கறை செலுத்தவில்லை. பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற எண்ணமும் அதற்கில்லை.

ஜே.வி.பியுடன் சேர்ந்து ஐ.தே.முன்னணி அரசை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டுமென்பதே, அதற்குள்ள முக்கியமான பிரச்சினையாகவுள்ளது.

இன்றுள்ள பொருளாதார, சமூகநலக் கட்டமைப்பை முன்னேற்றுவதற்குரிய மாற்றுக்கொள்கைகள் எதையும் வகுத்துக் கொள்வதில், பொ.ஐ.முன்னணி பின்தங்கியே இருக்கிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பலமாதங்களாகத் தேடப்பட்ட கசிப்பு உற்பத்தியாளர் கைது!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகப் பொலிஸாரால் பல மாதங்களாகத் தேடப்பட்டு வந்த முக்கிய கசிப்பு உற்பத்தியாளர் ஒருவர், கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதுடன், அவர் மீது மூன்று வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வழக்குகளை விசாரித்த மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி வசந்தசேனன், முதலாவது வழக்கில் ஒரு இலட்சம் ரூபா காசுப்பிணையிலும், ஆட்பிணையிலும், இரண்டாவது வழக்கில் 75 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், ஆட்பிணையிலும், 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், ஆட்பிணையிலும் செல்ல சந்தேகநபரை அனுமதித்தார்.

(78)

# கருப்பொருள் மைய பாடத்திட்ட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டு முதல் ஆறாம்தர மாணவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருப்பொருள் மைய பாடத்திட்டத்திற்கான கருத்தரங்குகள், தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளன.

கணித பாடத்திட்டத்திற்கு இன்றுமுதல் 11 ஆம் திகதி வரையும், சுற்றாடற்கல்விக்கு இன்றுமுதல் 12 ஆம் திகதி வரையும், ஆங்கிலமொழிக்கு 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரையும், தமிழ்மொழிக்கு 20 ஆம் திகதிமுதல் 29 ஆம் திகதிவரையும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளில் - ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்திட்டத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அரசு மீண்டும் யுத்தத்திற்குச் செல்லாது; அரசின் விசேட ஆலோசகர் நம்பிக்கை!

இலங்கை அரசாங்கம் மீண்டும் யுத்தத்தில் இறங்கமாட்டாது என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகரான நிரஞ்சன் தேவ ஆதித்ய நம்பிக்கை தெரிவித்துள்ளர்.

ஐரோப்பிய யூனியனின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான குழுவின் ஆலோசகராகவும், இலங்கைக்கான கௌரவத் தூதுவராகவும் பணியாற்றும் நிரஞ்சன் தேவ ஆதித்ய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.

இவர் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து இலங்கைக்குக் கூடுதலான நிதியுதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ரோக்கியோவில் நடைபெறும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

இவர் ரோக்கியோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மீண்டும் யுத்தத்துக்குச் செல்லாது என, தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் - ரோக்கியோ மாநாட்டில் உதவிவழங்கும் நாடுகளிடமிருந்து 300 கோடி டொலர்கள் உதவியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், கடந்த இருபதாண்டு கால் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள், இழக்கப்பட்ட பொருளாதார வளங்களின் பெறுமதியை இந்த நிதியுதவியால் ஈடுசெய்யமுடியாது. இழப்புக்களோடு ஒப்பிடும்போது, இந்த நிதியுதவி மிகச் சிறியளவிலானதே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மீண்டும் யுத்தத்துக்கு இட்டுச்செல்லாமல், நாட்டு மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்கும் எனத் தாம் நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# விஸ்தரிக்கப்பட்டு வரும் துரையப்பா விளையாட்டரங்கு

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டுப் போட்டிக்காக, துரையப்பா விளையாட்டரங்கு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

ஓகஸ்ட் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவுக்கு ஏற்றவகையில் துரையப்பா விளையாட்டரங்கு செப்பனிடப்பட்டு வருவதுடன், அதன் எல்லைகளும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இதற்காக, கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்பதற்காக பெருந்தொகையான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் போட்டியிட மாட்டேன் என்றவர் வெற்றி பெற்றார்; உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர் தோல்வி கண்டார்!

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவரைத் தெரிவு செயவதற்கான தேர்தல் பிரசாரம் கடந்த ஒரு மாதகாலமாகவே நடந்து வந்தது. தனியார் தொலைக்காட்சிகளில், கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்முறைச் செய்திகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம், இந்தத் தேர்தலுக்கு இல்லாவிட்டாலும், ஒரு சிலநிமிடங்களை கிரிக்கெட் தேர்தலுக்காக ஒதுக்கின. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்துக்குத் துணை புரியும் தன்னை, முதற்தரத் தொலைக்காட்சி என்று மார்புதட்டிக் கொள்ளும் தொலைக்காட்சி கிரிக்கெட் தேர்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தமையைத் தொலைக்காட்சி ரசிகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

அறிவுஜீவிகள் என்று சொல்லிக் கொள்ளும் பலர் பதவிக்காக அலைந்தாகள். அவர்கள் தமக்குப் பொருத்தமில்லாத பதவியைக் கூட வகிக்கத் தயாராக இருக்கின்றார்கள். அதனால்தான் இன்று அரசதுறைகளில் நிர்வாகச் சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் - ஜுன் 6 ஆம் திகதி மிகுந்த பாதுகாப்புடன் கொழும்பிலுள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவகத்தில் நடைபெற்றது. வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்கச் செல்வோர் பலத்த உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். ஊடகவியலாளர்கள் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்காக மூன்று பேர் போட்டியிட்டனர். முதல் வேட்பாளரான திலங்க சுமதிபால இச்சபையின் தலைவராக இரண்டு முறை பதவி வகித்தவராவார். இவர் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவருமாவார். இவரது பதவிக் காலத்திலேயே ரங்கிரிய தம்புள்ள கிரிக்கெட் மைதான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. கிரிக்கெட் மைதான நிர்மாண வேலைகளின்போது, பல கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் திலங்க சுமதிபால மீது சுமத்தப்பட்டன. அப்போது விளையாட்டு அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கிரியெல்ல இவரைப் பதவியில் இருந்து நீக்கினார். அப்போது திலங்க சுமதிபால ஊடகவியலாளர்கள் மத்தியில், "இனியொருபோதும் கிரிக்கெட் சபையின் தலைவராகச் செயற்படமாட்டேன்" என்று கூறியிருந்தார்.

மக்களிடம் செல்லும் அரசியல்வாதிகள்தான், உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிடுவார்கள். கிரிக்கெட் சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்கள்கூட, வாக்குறுதிகளைப் பறக்கவிடுகின்றார்கள். ஏன்? கிரிக்கெட் உலகில் சஞ்சரித்தால், கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்கலாம். அதனால்தான் உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிடுகின்றார்கள் என வேதனையோடு ஒரு கிரிக்கெட் பிரமுகர் கூறினார்.



அரவிந்த டீ சில்வா

ஏன் மீண்டும் போட்டியிட முன்வந்தீர்கள் எனக் கேட்டபோது - கிரிக்கெட் சபையைத் திறம்பட நடத்தவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. நான் இருமுறை தலைவராக இருந்துள்ளேன். அந்த அனுபவம் மிகவும் துணைபுரியும் என்றாராம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தேர்தலில் போட்டியிட்ட மற்றவர் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆவார். இவர் இலங்கை அணியைச் சிறப்பாக வழி நடத்தி, உலக அரங்கில் இலங்கைக் கிரிக்கெட் அணியைப் பற்றிப் பரபரப்பாகப் பேசவைத்தவர். உலகக் கிண்ணத்தை இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்ததோடு, உலகில் மிகச் சிறந்த அணி எனப் பேசவைத்தவர். கிரிக்கெட் தொடர்பான நுணுக்கங்களை நன்கு அறிந்தவர். இவர் ஏன் போட்டியிட்டார்? இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசரதேவை ஏற்பட்டுள்ளது. எனது வளர்ச்சிக்கு உதவிய "கிரிக்கெட் விளையாட்டுக்கு" நான் ஏதாவது செய்ய வேண்டும். அதற்காகவே தேர்தலில் போட்டியிட முன்வந்தேன் என்று கூறினார். இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட மூன்றாவது வேட்பாளர், மொஹான் டீ சில்வா ஆவார்.

இந்த மூன்று வேட்பாளர்களுள் திலங்க சுமதிபால, அர்ஜுன ரணதுங்க ஆகியோரிடையே கடும்போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முடிவுகள் வேறுவிதமாக அமைந்துவிட்டன.

நாடளாவியரீதியில் பதிவு செய்யப்பட்ட 85 கழகங்களைச் சேர்ந்த, 144 வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். ஆனால், 138 வாக்காளர்களே வாக்களித்தனர்.



அர்ஜுன ரணதுங்க

அவர்கள் அளித்த வாக்குகளுள் 121 வாக்குள் திலங்க சுமதிபாலவுக்கும், 10 வாக்குகள் மொஹான் டீ சில்வாவுக்கும், 7 வாக்குகள் அர்ஜுன ரணதுங்கவுக்கும் கிடைத்தன. 121 மேலதிக வாக்குகளைப் பெற்று, இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக திலங்க சுமதிபால மூன்றாவது முறையாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கட்டுப்பாட்டுச் சபையின் ஏனைய பதவிகளுக்கு திலங்க சுமதிபாலவின் ஆதரவாளர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பல்வேறு விதமான கேள்விகள் எழுந்துள்ளன. இலங்கை அணியை உலக அரங்கில் பேசவைத்த அர்ஜுன ரணதுங்கவுக்கு 7 வாக்குகளா?

உலகக் கிண்ணத்தையே இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்த வீரருக்கு, கிரிக்கெட் கழகங்கள் செய்த கைமாறு இதுதானா எனக் கேட்கின்றார்கள். அர்ஜுன ரணதுங்கவுக்கு மட்டுமல்ல, உலகக் கிரிக்கெட் ரசிகர்களுக்கே அதிர்ச்சியைத் தந்த சம்பவங்கள் இருக்கின்றன.

அர்ஜுன ரணதுங்க சுமார் 25 வருடங்களாக எஸ்.எஸ்.சி கழகத்தில் அங்கத்துவம் வகித்து வருகின்றார். அவர் தனது வாழ்நாளில் பெரும்பகுதி நேரத்தை எஸ்.எஸ்.சி கழகத்திலேயே செலவிட்டுள்ளார். இந்த எஸ்.எஸ்.சி கழகம் புகழ் பெற்ற கழகமாக மாறப் பங்களிப்புச் செய்தவர் அர்ஜுன ரணதுங்க ஆவார்.

அர்ஜுன ரணதுங்க வளர்த்த எஸ். எஸ்.சி கழகத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் இவருக்கு ஆதரவு வழங்க மறுத்துவிட்டனர். இச்செயல் அர்ஜுனவுக்கு மட்டுமல்ல, கிரிக்கெட் ரசிகர்களுக்குக்கூடப் பெரும் ஏமாற்றமே.

எஸ்.எஸ்.சி கழகமும் கைவிட்ட சம்பவம் அவருக்கு அதிர்ச்சியைத் தந்தாலும், கிரிக்கெட் விளையாட்டின் நீண்டகால நண்பரும், இவரது கிரிக்கெட் அணியின் உபதலைவராக இருந்தவருமான அரவிந்த டீ சில்வாவும், திலங்க சுமதிபால அணியில் சேர்ந்து கொண்டமை பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உப தலைவர்களுள் ஒருவராக அரவிந்த டீ சில்வா தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அரவிந்த டீ சில்வா ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் என்பதும் சுட்டிக்காட்டுவதற்குரியதாகும்.

இலங்கை அணி உலகத்தரம் வாய்ந்த அணியாக மாறுவதற்கு, சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியவர் அர்ஜுன ரணதுங்க ஆவார். மிகச்சிறந்த அணித்தலைவர் என உலக கிரிக்கெட் ரசிகர்களால் புகழப்பட்டவர். இலங்கை நாட்டை உலகமே திரும்பிப் பார்க்க வைத்த அணித்தலைவர். கிரிக்கெட் விளையாட்டின் நுணுக்கங்களை நன்கு அறிந்தவர். இலங்கையின் இளம் கிரிக்கெட் வீரர்களின் வளர்ச்சிக்கு- அவரது ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மிகவும் அவசியமானதாகும்.

நாட்டில் மதிக்கப்பட வேண்டிய சாதனை படைத்த வீரரை, கிரிக்கெட் கழகங்கள் அவமானப்படுத்திவிட்டன என ஒரு சாரார் மனம் வெதும்புகின்றனர். இன்னொருசாரார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்ற உறுப்பினரான ரணதுங்க இப்படியான தேர்தலில் போட்டியிட்டிருக்கக் கூடாது என்று கூறுகின்றனர்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர், இலங்கை அணியை புகழின் உச்சிக்குக் கொண்டுசென்ற அர்ஜுன ரணதுங்காவுக்கா 7 வாக்குகள் கிடைத்தன என்று அதிர்ச்சியுடன், இலங்கைப் பத்திரிகையாளர் ஒருவரைப் பார்த்துக் கேட்டாராம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தேர்தலின் வாக்குகள், விலைகொடுத்து வாங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றன. அதே வேளை - கிரிக்கெட்டிற்குள்ளும் அரசியல் புகுந்துவிட்டது என்றும் கூறுகின்றார்கள். பலகோடி ரூபா மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தலைவர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டவர் மீண்டும் எப்படித் தலைவரானார் என்றும், சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

அர்ஜுன ரணதுங்க இந்தத் தேர்தலை ஒரு பாடமாக எடுத்துத் தனது தவறுகளை ஆராய்ந்து, மீண்டும் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் சிலர் கூறுகின்றனர்.

இலங்கையில் கல்வியறிவு உள்ளவர்கள் அதிகம் என்று, யுனெஸ்கோவின் அறிக்கை கூறுகின்றது. ஆனால், பலர் "அறிவைப்" பயனபடுத்துபவர்களாகத் தெரியவில்லை. விலைபோகக் கூடியவர்களும், காட்டிக் கொடுப்பவர்களும், நன்றி மறந்தவர்களும் எமது நாட்டில் இருக்கும்வரை உண்மைகள் ஊமைகளாகி விடுகின்றன.

இந்தக் கட்டுரையை எழுதும்போது, இறுதியாகக் கிடைத்த செய்தியையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.



திலங்க சுமதிபால

அர்ஜுன ரணதுங்க அங்கம்வகிக்கும் எஸ்.எஸ்.சி கழகம் அவருக்கு வாக்களிக்கத் தவறியது. ஆனால், தேர்தலுக்குப்பின் அதாவது - ஜுன் 7 ஆம் திகதி நடைபெற்ற 3 ஆம் தரக் கிரிக்கெட் போட்டியில் அர்ஜுன ரணதுங்க எஸ்.எஸ்.சி கழகத்தின் சார்பில் விளையாடியிருக்கின்றார். அவரது நடவடிக்கை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறந்த விளையாட்டு வீரன்- வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைப் பெற்றவன் என்பதை அர்ஜுன ரணதுங்க நிரூபித்துள்ளார் என்று கூறலாம்.

**போகிறபோக்கில்...**

**கொழும்பிலிருந்து உதரன்**

# இடைக்கால நிர்வாகம் வழங்க அரசிற்கு தார்மீக கடமை உண்டு!

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை கோருகிறது

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதியை உடனடியாக இடைக்கால நிர்வாகம் ஒன்றின்கீழ் கொண்டு வரவேண்டும் என்றும், அந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்குவற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக - ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வுடக்கு - கிழக்கு மாகாணங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், நாம் எதிர்பார்த்த பல விடையங்கள் இன்னும் நடைபெறவில்லை. படையினர் தொடர்ந்து மக்கள் வாழும் பிரதேசங்களிலே நிலை கொண்டிருப்பதால், எம் மக்களுடைய மீள்குடியேற்றம் நடைபெறுவதும் முடியாமலுள்ளது. புனர்நிர்மாணப் பணிகள் நிதி முடக்கத்தால் கேள்விக்குரியனவாகியுள்ளன. உயர்பாதுகாப்பு வலயங்கள் பல மக்கள் குடியேறவேண்டிய நல்ல நிலங்களையெல்லாம் உள்ளடக்கியதாயுள்ளன. இந்தவேளையிலே, வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஒரு தார்மீகக் கடமை அரசுக்கு உண்டு.

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்படி நடவடிக்கை பொருத்தமானதென நம்புகிறோம். இதன்மூலம் - தமிழ் மக்கள், அரசின் மீதும் நம்பிக்கை கொள்வதற்கு வழி செய்யலாம்.

எங்களுடைய மண்ணிலே வாழும் மக்களுடைய வாழ்க்கையை உயர்த்தவும், மண்ணிலுள்ள அழிந்துபோன கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்குரிய திட்டங்களை வரையவும், அவற்றைச் செயற்படுத்தவும் அதிகாரமுள்ள நிர்வாகம் ஒன்று மிக அவசியமாகும். அதனை வழங்கித் தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென, யாழ்ப்பாண மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினராகிய நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றும், மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றோர் வடமராட்சிப் பகுதியில் அகப்பட்டனர்

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற எட்டுப் பேரை மின்சாரசபை அதிகாரிகளின் உதவியுடன், பருத்தித்துறை-நெல்லியடிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பருத்தித்துறை மின்சாரசபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பொலிஸாரின் உதவியுடன் திடீர் சோதனையை மேற்கொண்ட பொழுதே இந்த எட்டுப்பேரும் சிக்கினர்.

இவர்களைப் பருத்தித்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா குற்றப் பணமாகச் செலுத்தும்படியும், சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற உபகரணங்களைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (17)

# கனடாவில் 'சார்ஸ்' பீதி: 2 ஆவது அலை ஆரம்பம்!



கனடாவில், 'சார்ஸ்' நோய் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதான தகவல்கள் வெளியான நிலையில் - இரண்டாவது அலையென 'சார்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்ட புதியவர்களது விபரங்கள் வெளித் தெரியவந்துள்ளன.

ரொரன்ரோ வைத்தியசாலையில்- பிரசவம் ஒன்றுக்கு உதவிவிட்டு வந்த மருத்துவ மாணவர்கள் இருவர் 'சார்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் - சிகிச்சைக்குட்பட்டிருந்த 12 நாட்களுக்குள் நோயால் பாதிக்கப்பட்டது தெரியவந்ததாகக் கனேடிய மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி -'சார்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்ட 70 பேர் ரொரன்ரோவில் தற்பொழுது வசித்து வருகின்றனர். இவர்களில் 21 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

இதுவரை ரொரன்ரோவில் 'சார்ஸ்' நோயால் 31 பேர் பலியாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

# காஸாவில் கடும் சண்டை; 4 இஸ்ரேல் படையினர் பலி!

## புதிய சமாதானத் திட்டம் கேள்விக்குறியாகிறது



தாக்குதல் நடந்த பகுதி

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் - தனது புதிய சமாதானத் திட்டத்தை முன்னெடுத்து வருகையில், காஸாப் பகுதியில் இஸ்ரேலியர்களின் முக்கிய கடவைப் பகுதியொன்றில் நடைபெற்ற கடுமையான சண்டையொன்றில் - நான்கு இஸ்ரேலியப் படையினரும், மூன்று பலஸ்தீனர்களும் பலியாகியிருக்கின்றனர்.

இஸ்ரேலியப் படையினருக்கு எதிராக, தாம் எவ்வேளையிலும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என, பலஸ்தீனப் போராளிகள் அறிவித்த சில மணி நேரங்களில் இச்சண்டை நடந்திருக்கிறது.

இத்தாக்குதலுக்கு, மூன்று பலஸ்தீனப் போராளிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து உரிமைகோரியுள்ளன.

இஸ்ரேலின், இரேஸ் இராணுவ முகாமின் பகுதிக்குள் - இஸ்ரேலியப் படையினர் அணிவதுபோன்ற சீருடைகளை அணிந்து வந்தவர்கள்- திடீரெனத் தாக்குதல் நடத்தியதாக, சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் - புதிய சமாதானத் திட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - காஸாப் பகுதிக்கு இன்று விஜயம் செய்வதாக இருந்த பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் - தனது பயணத்தை இத்தாக்குதலால் ஒத்தி வைத்திருக்கிறார்.

# சவூதித் தாக்குதலில் ஈடுபட்டோர் அடையாளம் காணப்பட்டனர்!



சவூதி அரேபியத் தலைநகர் ரியாத்தில், அமெரிக்கர்களின் குடிமனைகள் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்களை, தாம் அடையாளம் கண்டிருப்பதாக சவூதி அரசாங்கம் அறிவித்துள்ளது.

சவூதி அரசாங்கம் - இந்தச் சந்தேக நபர்கள் 12 பேரின் பெயர்களை வெளியிட்டுள்ளபோதும் - அவர்கள் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற விபரத்தைத் தெரிவிக்கவில்லை.

35 பேர் பலியான இத்தாக்குதல்களில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட 19 சந்தேக நபர்களில், ஐவர் சம்பவம் நடப்பதற்கு முன்பாகத் தப்பித்துக்கொண்டனர்.

இதேவேளை - தற்கொலைப் படைத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் ஒரே நாட்டவர்களா என்பதைக் கூறமுடியாதபோதும் - இவர்கள் அனைவரும் ஒரே கலாசாரத்தில் வந்தவர்களே என்பதைத் தெரிவிக்க முடியும் என, சவூதி அரசின் உள்துறை அமைச்சர் இளவரசர் நயாப் பின் அப்துல் அசீஸ் கூறியுள்ளார்.


ராஜா யாழ்ப்பாணம்.

இன்றுமுதல்
சில தினங்கள் மட்டும்
அஜித்,
வசுந்தராதாஸ்,
சிட்டிசன்
10.30, 2.30, 6.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சாலினி, தாமு, ராதாரவி
நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 3.45 (பு.நே)
The Rock The scorpion king
(சி-974)


# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் கருணாகரன் விபிஜன்

தாயகத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Maikammer upid ரினை வதிடமாகவும் கொண்டுள்ள கருணாகரன் விஜயதீபா தம்பதிகளின் செல்வப் புதல்வன் விபிஜன் தனது முதலாவது பிறந்தநாள் 13.05.2003 இதனை 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை Burger haus Maikammer என்ற இடத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா குடும்பத்தினர் (ஜேர்மனி) அம்மப்பா (லண்டன்) மாமா (பிரான்ஸ்), அத்தை (டென்மார்க்) ஆசையப்பா (லண்டன்), தாயகத்தில் வசித்து வரும் அம்மம்மா, பாட்டி, சித்தி (சங்கானை), பெரியப்பா குடும்பத்தினர் (வவுனியா), அத்தை குடும்பத்தினர் (கிளிநொச்சி) மற்றும் மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் விபிஜனை பல்கலைகளும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தொடர்புகளுக்கு : 05 59 82 86 78 (சி-1069) தகவல் : மாமா (பிரான்ஸ்)

# வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப்பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத்திகதி 25.06.2003 ஆகும். விண்ணப்பப்படிவத்தினை ரூபா.5/= செலுத்தி தலைமைக்கந்தோரில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், வலி கிழக்கு (தெ.ப.) ப.நோ.கூ.சங்கம், நீர்வேல" என்ற முகவரிக்கு நேரடியாகவோ, அன்றேல் பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும், சான்றிதழ்களின் நிழற்படபிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவியின் பெயர் | சம்பள குறியீடு 108/81 | சம்பள குறியீடு 165/88 | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) பொது முகாமையாளர்கள் | 101/5 | 101/7 | 01 |
| 2) கிளை முகாமையாளர் | 208/13 | 208/15 | 08 |
| 3) லொறிச்சாரதி | 312/12 | 312/14 | 02 |
| 4) லொறிச் சுத்திகரிப்பாளர் | 314/14 | 314/16 | 01 |

### 1. பொது முகாமையாளர்

சம்பளக் குறியீடு :- 101/5 (108/81) 101/07 (165/88)
சம்பளத் திட்டம் :- 5500 - 8200 (31/99 சுற்றுநிருபம்)
130 10 140 10
வயதெல்லை :- 18 - 50 வருடங்கள்
தகைமைகள் :-

(அ) கூட்டுறவு பணியாளர் 6 ஆவது சம்பளத் திட்டத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 7 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைத்துவ அல்லது மேற்பார்வை மட்டப் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றின் பட்டதாரி சான்றிதழ் அல்லது இதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் பட்டதாரி சான்றிதழ் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் (உயர்தரம்)/ க.பொ.த (உயர்தரம்) இல் 3 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்

### 2. கிளை முகாமையாளர்

சம்பளக் குறியீடு - 208/13 (108/81 208/15 (165/88)
சம்பளத்திட்டம் - 3500 - 4850 (31/99 சுற்றுநிருபத்திற்கமைய)
65 10 - 70 10
வயதெல்லை : 18 - 45 வருடங்கள் (183/90 சுற்றறிக்கைக்கமைய)
தகைமைகள் :

(அ) கூட்டுறவுப்பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணயாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணம்) தராதரப்பத்திரம்/க.பொ.த. (சாதாரணம்) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம், சிங்களம்/தமிழ் பாஷை என்பவற்றை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தியும், சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (சுற்றறிக்கை 108/81)

### 3. லொறிச் சாரதி

சம்பளக்குறியீடு : 312/ 12 (108/81) 312/14 (165/88)
சம்பளத்திட்டம் : 3750 - 5200 (சுற்றறிக்கை 31/99 இற்கமைய)
70 10 - 75 10
வயதெல்லை : 18 - 45 வருடங்கள் (31/97 சுற்றறிக்கைக்கமைவாக)
தகைமை : 5 ஆம் வகுப்பு சித்தி அடைந்திருப்பதுடன், பாரவூர்தி (பஸ், லொறி, ட்ரக்டர்) செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம். 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

### 4. லொறி சுத்திகரிப்பாளர்

சம்பள குறியீடு : 314/14 (108/81) 314/16 (165/88)
சம்பளத்திட்டம் : 3250 - 4500 (சுற்றறிக்கை 31/99 இற்கமைவாக)
60 10 - 65 10
வயதெல்லை : 18 - 45 வருடங்கள் (31/97 சுற்றறிக்கைக்கமைவாக)
தகைமைகள் : 15 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

5 ஆம் வகுப்பு சித்தியும், .தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

வலி.கிழக்கு (தெ.ப.)
ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

(சி - 1066)

அ.க.த. கிருஷ்ணராசா.
தலைவர்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ரோக்கியோவில் பங்கேற்பதை எமது மக்கள் விரும்பவில்லை!

## யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதி

"விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளாததால் கவலைப்படுபவர்கள் சிங்கள மக்களே. நாம் கலந்துகொள்வதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றி எமது மக்களுக்குத் தெரியும். இந்த மாநாட்டில் நாம் கலந்துகொள்வதை, எமது மக்கள் விரும்பவில்லை"- என யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

வளவை வளவனின்- 'தேசத்தின் பாடல்கள்' என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு, சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது -

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி ஒரு வருடம் ஆகிவிட்டது. மரணங்களும் வேட்டொலிகளும் இல்லை. இதற்காக நாங்கள் சந்தோஷப்படுகின்றோம். இந்த ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கம், எமது மக்களின் இயல்பு வாழ்க்கையே. ஆனால், எமது மக்களின் இயல்பு வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தென்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையில்தான் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களைப் பாதுகாக்கக்கூடிய படை எம்மிடம் உண்டு. ஓர் இனம் பாதுகாப்பாக வாழ, அவர்களுக்கென ஒரு படையிருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகள் அவ்வாறே இருக்கின்றனர்.

ரோக்கியோ மாநாட்டில் நாங்கள் கலந்துகொள்ளாததற்காகக் கவலைப்படுபவர்கள் சிங்கள மக்களே. இந்த மாநாட்டுக்குப் போவதால் ஏற்படும் பிரச்சினைகளைவிட, போகாமல் விடுவதால் ஏற்படும் பிரச்சினைகள் குறைவு என்பது எமது மக்களுக்குத் தெரியும்.

இங்கு வந்தபோது, என்னிடம் கேட்டார்கள் - விடுதலைப் புலிகள் ரோக்கியோ போய்விட்டார்கள் என்கிறார்களே உண்மையா என்று. நான் சொன்னேன் - போகவேண்டியவர்கள் எல்லாம் வன்னியிலே இருக்கிறார்கள். பாலா அண்ணா லண்டனில் இருக்கிறார் என்று.

- இவ்வாறு இளம்பரிதி கூறினார்.

# நிலாவெளியில் கடற்படையினரால் புலிகள் இயக்க உறுப்பினர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலை - நிலாவெளியில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில், நிலாவெளியில் கடற்படை முகாமுக்கு அண்மையில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

கடற்படை முகாமுக்கு அண்மையில் சந்தேகத்திற்கிடமான முறையில் ரி.56 ரக துப்பாக்கி மற்றும் மூன்று கைக்குண்டுகளுடனும் நடமாடினார் என்று கூறியே இவரைக் கைதுசெய்த படையினர், துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக்காலை திருகோணமலை நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, இவரைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (10,04)

# தமிழராசிரியர் சங்கத் தலைவர் ரோக்கியோ செல்ல விசா மறுப்பு

## இறுதி நேரத்தில் கைவிரித்த ஜப்பான் தூதரகம்

வடக்கு - கிழக்கு மற்றும் தென் பகுதிகளைச் சேர்ந்த சமூகப் பிரதிநிதிகள் மூவருக்கு - ரோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான விசாவை வழங்க, ஜப்பானியத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

விசா மறுக்கப்பட்ட மூவரில் ஒருவரான தமிழராசிரியர் சங்கத் தலைவர் த.மகாசிவம் இத்தகவலை வெளியிட்டார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சர்வதேச அளவிலான அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும், இனத்துவேஷத்துக்கும் எதிரான அமைப்பினால், ரோக்கியோ மாநாட்டில் பங்குகொள்ளுமாறு - த.மகாசிவம், ரமணி முத்தவெட்டுகம, குரூஸ் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இவர்கள், ஜப்பான் தூதரகத்திடம் விசாவுக்கு விண்ணப்பித்தபோதும், பின்னர் தொடர்புகொள்ளுமாறு கூறப்பட்டது. ஆனால், பின்னர் தூதரகத்துக்குச் சென்றபோது, விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டதாக மகாசிவம் தெரிவித்தார். தமக்கான - போக்குவரத்து, தங்குமிட, உணவு வசதிகளை - மாநாட்டுக்கு அழைப்புவிடுத்த நிறுவனமே பொறுப்பேற்றிருந்ததாகவும் மகாசிவம் மேலும் குறிப்பிட்டார்.

# மந்தகதியில் ஏ -9 வீதி புனரமைப்பு; ஆசிய அபிவிருத்தி வங்கி அதிருப்தி!

(கொழும்பு)

ஏ-9 வீதிப் புனரமைப்புப் பணிகள் மிகவும் மெதுவாகவே மேற்கொள்ளப்படுவதாக, ஆசிய அபிவிருத்தி வங்கி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மாங்குளத்தில் நடந்த ஏ-9 வீதிப் புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடலின்போதே, ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் இந்த அதிருப்தியை வெளியிட்டனர்.

குறித்த காலத்துக்குள் இவ்வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. 500 மில்லியன் ரூபா இந்த வீதிப் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், தாமதங்கள் ஏற்பட்டுவருவதால், வீண் செலவினங்களும் ஏற்பட்டுவருகின்றன என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது

ஆரம்பத்தில் இந்த வீதிப் புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டபோது, இந்த வருட இறுதிக்குள், இப்பணி நிறைவேற்றப்படத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற 19 வயதிற்திற்குட்பட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில், ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

## அண்ணனை அலவாங்கால்...

இறந்தவரின் சடலம், யாழ். போதனா வைத்தியசாலையில், நேற்றிரவு பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, அண்ணனை அலவாங்கால் அடித்துக் கொலைசெய்த, கி.முரளிதரன் தலைமறைவாகிவிட்டார். இவரைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் தேடுதல் நடத்தி வருகின்றனர். யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். கொலையுடன் சம்பந்தப்பட்டவர், யாழ். குடாநாட்டை விட்டுத் தப்பியோடாமல் பார்த்துக்கொள்வதற்காகக் கண்காணிப்பை மேற்கொள்ளும்படி, முகமாலை சோதனைச் சாவடியில் கடமையிலுள்ள பொலிஸாருக்கு - யாழ். நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(ச,க,111, 121)

## ரோக்கியோ...

தகைய மாநாடுகளில் தானே பங்கு பற்றி வந்ததாகவும் தெரிவித்தார்.

ரோக்கியோ மாநாட்டுக்குப் புறப்படுவதற்குச் சில மணிநேரம் முன்னதாகவே, தன்னைச் சந்திக்க விரும்புவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தகவல் அனுப்பியதாக அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ள சந்திரிகா, அதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதைத் தவிர்த்துக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால நிர்வாக...

பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகப் புலிகளும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவிப்பை விடுக்கலாமெனக் கூறப்படுகிறது. இது குறித்து - உள்ளூர், சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டுள்ளன.

இதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். அத்துடன், இன்று காலை மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர், அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்யையும் சந்தித்துப் பிரதமர் பேச்சு நடத்துவார்.

இதனிடையே, இன்று காலை ஆரம்பமாகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - ஜப்பானியப் பிரதமர், ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது உரைகளையடுத்து, இணைத் தலைமைதாங்கும் - நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

இதையடுத்து, ஆசிய அபிவிருத்தி வங்கி, யு.என்.டி.பி பிரதிநிதிகள் - இலங்கைக்கான நிதியுதவி குறித்து, தேவை மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பர்.

பிற்பகல் நடைபெறும் இரண்டாவது அமர்வில், உலகவங்கித் தலைவரின் உரை ஒளிப்பதிவு நாடா மூலம் நிகழ்த்தப்படும் எனவும் தெரியவருகிறது.

## நீண்டகால....

தமக்கிடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில், இந்த நிதியைப் பயன்படுத்தலாம். நாம் முழு இலங்கைக்குமே நிதியுதவியை வழங்குகிறோம்.

இங்கு அரசியல் ஆதாயம் எதுவுமேயில்லை. இதில் சந்தேகப்படவும் வேண்டியதும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ராணுவத்தினரின்...

பேணிவருவதாக தனது விளக்கக் கடிதத்தில், யாழ். இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

இவரின் இந்த விளக்கக் கடிதத்தை, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கொழும்புத் தலைமையகம் மிக நுணுக்கமாக ஆராய்ந்து வருகிறது.

அரசியல் யாப்பின் மூன்றாவது சரத்தின் பதினான்காவது பிரிவில், பொதுமக்களின் வசிப்பிட சுதந்திரம், தங்குதடையற்ற நடமாட்டத்துக்கான சுதந்திரம் ஆகியவை பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அதேவேளை - பதினைந்தாவது சரத்தின்படி, பாதுகாப்புக்கருதி மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், படையினருக்கு ஆவசரச் சட்ட விதிகளின் கீழ், சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனினும் - அவசரகாலச் சட்டம் தற்போது நடைமுறையிலில்லாத காரணத்தால், உயர்பாதுகாப்பு வலயம் சட்டவிரோதமானது என்ற முடிவுக்கு, மனித உரிமைகள் ஆணைக் குழு வரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சமாதானம் இப்பொழுது...

றது என்பது.

அன்றைக்கு நாட்டைக் கட்டியெழுப்ப 483 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்பட்டது. இன்றைக்கோ, 300 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது. பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் - அதாவது சமாதானம் இம்முறையும் பிழைத்தால்- அடுத்தமுறை இதைவிடப் பெருந்தொகை பில்லியன்கள் கொடுத்துச் சமாதானம் செய்யவேண்டிவரும்.

பில்லியன்களால் ரணிலைச் சுற்றிக் கவசமிட முயலும் நாடுகள், சமாதானத்துக்குப் பதிலாகச் சந்தை என்ற அடிப்படையிலான சமாதானம் செய்ய முன்வந்துள்ளன. எனவே, அவர்கள் தரும் கடனை வட்டியும் குட்டியுமாக அறவிடுவதென்றாலும் சரி அல்லது அவர்களுடைய வர்த்தகப் போக்குவரத்து வழிகளையும், சந்தை வாய்ப்புகளையும் பாதுகாப்பதென்றாலும் சரி, எல்லாவற்றுக்கும் முதலில் சமாதானம் வேண்டும்.

அது புலிகளோடு செய்யப்படும் ஒரு சமாதானமாகவும் இருக்க வேண்டும். எனவே - சமாதானம் எனப்படுவது யுத்தத்தை ஒத்திவைக்கும் ஒரு பொறிமுறையா அல்லது யுத்தத்தை இல்லாதொழிக்கும் விஞ்ஞானபூர்வமான ஒரு அணுகுமுறையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இப்பொழுது உதவிவழங்கும் நாடுகளிடமே விடப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 08 - 1935 |  | 29 - 05 - 2003 |

## திருமதி கமலம் இராமநாதர்

இலங்கை - நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இந்தியா - மடிப்பாக்கத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட, காலஞ்சென்ற இராமநாதர் அவர்களின் அன்பு மனைவியார் கமலம் அவர்கள் 29-05-2003 அன்று காலமானார். இவர், காலஞ்சென்ற கந்தப்பு, கனகராஜா (விவாகப் பதிவாளர்), பத்தினிப்பிள்ளை, பொன்னம்மா, காமாட்சி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மா அவர்களின் மைத்துனியும்,சறோஜா (பிரான்ஸ்), யோகமலர் (இந்தியா), ரவீந்தீரன் (சுவிஸ்), ரட்ணராஜா (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாயாரும், ஜீவரட்ணம் (பிரான்ஸ்), Dr நடராஜா (இந்தியா), உஷா (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிலேஸ்வரன், மாலவிக்கா, தசமெளலி, விதுஷா, அருணன், அஸ்மிகா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகட்கு:
0033 147375238 (பிரான்ஸ்)
0041 526248475 (சுவிஸ்)
0091 4422477537 (இந்தியா)

தகவல்:
ஜி.ஜீவரட்ணம்

## உயர்திரு தம்பையா செல்லத்துரை

(பரந்தன் கிளிநொச்சி முன்னாள் கிராமசேவையாளரும், பரந்தன் கிராமசபை முன்னாள் தலைவரும், பன்னங்கட்டி 3ஆம் வாய்க்கால் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும்.)

பரந்தன், 3 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த தம்பையா செல்லத்துரை அவர்கள் 08.06.2003 (நேற்று) காலமானார்.

அன்னார் - பளை மாசாரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா தம்பதிகளின் அன்பு மகனும், முல்லைத்தீவு - வெள்ளாம் முள்ளிவாய்க்கால் திரு.திருமதி விநாசித்தம்பி தம்பதிகளின் அருமை மருமகனும், தம்பையா ஏரம்பனின் மைத்துனரும், சண்முகத்தின் ஒன்றுவிட்ட சகோதரனும், சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும்,

காலஞ்சென்ற திருநாவுக்கரசு (3 ஆம் வாய்க்கால்), திலகவதி, இராஜலக்சுமி, சாந்தநாயகி, வரதராஜன், கமலாம்பிகை (ஆசிரியை, வவுனியா மத்திய மகாவித்தியாலயம்), புவனேஸ்வரி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தந்தையும்,

வைரமுத்து (முன்னாள் உரிமையாளர் திருப்பதி ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ்), அம்பலவாணபிள்ளை (தபாலதிபர், கைதடி), தமிழ்வாசன் (முன்னாள் கிராம சேவையாளர், நெடுங்கேணி), நாகராசா (வவுனியா, கச்சேரி), முருகதாஸ் (பொது முகாமையாளர், நமது ஈழநாடு), சரோஜினிதேவி, பிரபாளினி (ஆசிரியை, வவுனியா மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அருமை மாமனாரும்,

காலஞ்சென்ற றிஜிகாந்த் (கண்ணன்), ரவீந்திரன், மிரானன், தவராஜன், நந்தகுமார், சுபாசினி, ராஜ்குமார் (அலுவலக நிருபர், நமது ஈழநாடு), தர்சினி, தயானி, மாதுமை, மதுரா, சாயிமீரா, உமையாள், மாதங்கி, வேந்தன், நிவேதா, பிரதீபன், பிரசன்னா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) திங்கட்கிழமை, இல.20, கற்குழி, வவுனியா என்ற முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் தோணிக்கல் மயாணத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைரமுத்து
(மருமகன்- முன்னாள் உரிமையாளர், திருப்பதி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)
முருகதாஸ் (பொது முகாமையாளர், நமது ஈழநாடு)

*131/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.